ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி எ. பிரமோதூதஹு ஆனிமீ பகுதி ௬.

Vol 7. June & July 1930. No. 6.

கம்பர் கடவுள் வாழ்த்து.

(80-ம் பக்கத்தொடர்ச்சி.)

அயோத்தியா காண்டம்.

பாலகாண்டத்தில் மூன்று வாழ்த்துப் பாடல்களால் முத்தொழிலும், ஸத்வகுணமுமுடையவன் ஹரிரூபியான ஸர்வேச்வரனென்று நிரூபிக்கப்பெற்றது. இந்த வாழ்த்தினால் ஹரிரூபியான பரம்பொருளை இராமபிரான் என்று நிறுவி வரும்பொருள் உரைக்கப்பெறுகிறது.

வானின்றிழிந்துவரம்பிகந்தமாபூதத்தின்வைப்பெங்கும்
ஊனுமுயிருமுணர்வும்போலுள்ளும்புறத்துமுளனென்ப
கூனுஞ்சிறியகோத்தாயுங்கொடுமையிழைப்பக்கோற்றுறந்து
கானுங்கடலுங்கடந்திமையோரிடுக்கண்காத்தகழல்வேந்தை.

(இதன் பொருள்) கூனியும் சிற்றன்னையாகிய கைகேயியும் கொடுமையான காரியத்தைச் செய்தமையால் (தனக்குரிய) அரசியலைவிட்டுக் காட்டையுங் கடலையுங் கடந்து சென்று தேவர்களுடைய துன்பத்தைப் போக்கியருளிய திருவடிகளையுடைய வேந்தனாகிய இராமபிரானை, மூலப்ரகிருதியினின்றுந்தோன்றி அளவற்றனவாய், ஐம்பெரும்பூதங்களின் காரியமாய்ப் பரவியிரானின்றுள்ள பொருள்கடோறும் உடலும் உயிரும்போலவும், உயிரு

முணர்வும்போலவும் உள்ளும்புறத்தும் இருப்பானென்று ஆப்தர்கள் கூறுவர்; எ-று.

இனி, இதற்கு விரிவுரை வருமாறு.—

உலகிற் காணப்படுகிற பௌதிகப்பொருள்களெல்லாம் மூலப்பிரகிருதியினின்றுந் தோன்றினவாதலால் "வானின்றிழிந்தமா பூதத்தின்வைப்பு" என்றார். அதுவும்அளவற்றதாயிருக்கின்றதினால் "வரம்பிகந்தவைப்பு" என்றார். வான் ஈண்டு மூலப்பிரகிருதி. மூலப்பிரகிருதியினியல்புரைக்கவந்தவிடத்து ஆழ்வாரும், "சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில்பெரும்பாழ்" என்று அருளினார். இதனால் மூலப்பிரகிருதி, தன் காரியவர்க்கங்களைச் சூழ்ந்து முடிவற்றதாயிருக்குமென்பது பெறப்படும். இஃதன்றி, 'வானின்றிழிந்தமா பூதத்தின்வைப்பு' என்பதற்கு "𑌆𑌕𑌾𑌶𑌾𑌦𑍍 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌵𑌾𑌯𑍋𑌰𑌗𑍍𑌨𑌿𑌃 𑌅𑌗𑍍𑌨𑍇𑌰𑌾𑌪𑌃 𑌅𑌦𑍍𑌭𑍍𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀" "ஆகாசாத் வாயு: வாயோரக்நி: அக்நேராப: அத்ப்ய: ப்ருதிவீ" என்று பூதோத்பத்தி கூறிய முறைப்படி ஆகாசத்தினின்றுந் தோன்றிய பூதங்களாக்கப்பெற்ற இடமெங்குமென்றும் பொருள்கொள்ளினும் பொருந்தும். இனி இறைவன் அனைத்திடத்திலும் வியாபித்துள்ளான் என்பதை உவமைமுகத்தான் விளக்கத் தொடங்குகிறார். ஊனுமுயிரும் உணர்வும்போல்-சரீரமும் அதனுளிருக்கும் உயிரும், அவ்வுயிரிலிருக்கும் அறிவும்போல. உள்ளும்புறத்தும் உளன் என்பது—உள்ளினும் வெளியிலும் இருக்கின்றவனாகிய நாராயணனென்று ஆன்றோர் உரைப்பர். இங்கு உள்வியாப்திக்கு ஊனுள் உயிர் என்பதையும், வெளிவியாப்திக்கு உயிரில் உணர்வு என்பதையும் உவமை கூறியவாறு காண்க.

"உவமப்பொருளின் உற்றதுணரும், தெளிமருங்குளவே திறத்தியலான" என்றபடி உவமேயப்பொருளை நன்றாயறிவதற்கு யாவராலும் தெளிவாயறியப்பட்டதொன்றை உவமானமாகக் கூறவேண்டிய முறையை விடுத்து, இங்குத் தெளிவாயறியப்படாத ஊனுளுயிரையும் உயிரிலுணர்வையும் உவமையாகக் கூறுவது கூடுமோவென்னில்; இறைவன் பிரத்யக்ஷத்தாலும், அநுமானத்தாலும் அறியப்படாதவனாய் சாஸ்திரத்தாலறியத்தக்கவனாதலால் அவனுடைய

வியாப்தியை யறிதற்குச் சாஸ்திரத்தாலறியத்தக்கவற்றையே உவமையாகக் கூறினாராதலால் கூடுமென்க. இவ்வாறே "திடவிசும்பெரிவளிநீர்நிலமிவைமிசை, படர்பொருண்முழுவதுமாயவையவைதொறும், "உடன்மிசையுயிரெனக்கரந்தெங்கும்பரந்துளன்" என்று ஆன்றோர் வழக்குண்மையுங் காண்க. ஆனால் இறைவனுடைய உள் வியாப்திக்கு எள்ளில் எண்ணெயையும், வெளி வியாப்திக்கு யாக குண்டத்தில் அக்கினியையும் நூல்களில உவமையாகக் கூறப்பட்டுளதன்றோ! அதுபோலக் கூறாததற்குக் காரணம் யாதெனின்; இறைவனுடைய வியாப்தியைத் தெரிவிப்பது மாத்திரமே கருத்தாகவிருக்குமேல் இவ்வாறுரைக்கலாம். இங்கு வியாப்திக்குவமை கூறுமுகத்தான் உலகிற்கும், இறைவனுக்குமுள்ள சம்பந்தத்தையுந் தெரிவிக்கக் கருதினாராதலால் அறியப்பட்டவற்றை உவமை கூறாது விட்டார். இதனால் உலகிற்கும், இறைவனுக்கும் சரீர சரீரிபாவஸம்பந்தமுண்டென்று காட்டியவாறாயிற்று.

ஆத்மா, இருதயத்திலிருந்துகொண்டு ஞானத்தினால் சரீர முழுமையும் வியாபிப்பதுபோல இறைவன் எல்லாவற்றுள்ளும் தன் ஞானத்தினால் வியாபிக்கின்றானோவெனின்; அற்றன்று. பசுத்வஜாதியானது பசுவின் ஒவ்வோரவயவங்கடோறுமிருப்பது போல இறைவன் அணுமுதல் மேருவீறாகவுள்ள எல்லா வஸ்துக்களிலும் தன் பூரண ஸ்வரூபத்தோடு எழுந்தருளியிருக்கிறான். எங்கும் நிறைந்துள்ள விபுஸ்வரூபியாகியவன் சிறிய வஸ்துக்களில் தன் பூரண ஸ்வரூபத்தோடு எழுந்தருளியிருக்கிறானென்பது எவ்வாறு பொருந்துமெனின்; இவ்வாறுரைப்பது யுக்திக்கு விரோதமாயிருந்தாலும், மிகச்சிறியவற்றிலும் தன்பூரண ஸ்வரூபத்தோடிருக்கிறானென்பது இயையாதவற்றையும் இயைக்கும் அவனுடைய அகடிதகடநாஸாமர்த்தியத்திற்கு இலக்கியமாதலால் பொருந்துமென்க. ஈட்டில இதுவிஷயத்தைக் குறிப்பிடவந்தவிடத்தில் * "ஜ்யாயாநந்தரிக்ஷாத்" 'ஜ்யாயாநந்தரிக்ஷாத்' என்ற வஸ்து ஜலபரமாணுக்களில் வியாபியாநின்றால் அல்பாவகாசமாய் நெருக

* ஜ்யாயாநந்தரிக்ஷாத்—ஆகாயத்தினும் பெரியவன்.

குப்பட்டிருக்குமோவென்னில்; 'பரந்தவண்டமிதென' ஜலபரமாணுக்கள் தான் பரந்தவண்டமிதெனவாயிற்று வியாபித்திருப்பது. ஓரண்டத்தைச் சமைத்து அதிலே ஓரேகாகியை வைத்தாப்போலேயிருக்கும். 'எங்கும்பரந்துளன்' சேதனன் சரீரத்திலே வியாபிக்கும்போது அதிலேகதேசத்திலே நின்று ஞானத்தாலே எங்கும் வியாபிக்கக்கடவனாயிருக்கும். இவன் அங்ஙனன்றிக்கே ஸ்வரூபத்தாலே எங்கும் வியாபித்திருக்கும். விபுத்வத்தை அவனுக்குச் சொல்லி அணுத்வத்தை இவனுக்குச் சொல்லி இதுக்குள்ளே அவன் குறைவற வியாபித்திருக்குமென்றாலது கூடுமோவென்னில்; 'இவையுண்டகரனே' சிறு வடிவைக்கொண்டு பெரியவற்றையெல்லாம் தன் வயிற்றிலே வைத்தால் 'தயிருண்டபொன்வயிறிவ்வேழுலகுமுண்டுமிடமுடைத்தால்' என்கிறபடியே பின்னையும் அவ்வயிறே இடமுடைத்தாம்படியிருக்கவல்ல ஸர்வசக்தி சிறியவற்றிலே குறைவற்றிருக்கமாட்டானோ?" என்றுரைக்கப்பெற்றதும் இங்கறியத்தக்கது.

இங்கு, ஊனுமுயிரும்போல் என்றும், உயிருமுணர்வும்போல் என்றும் இரண்டு உவமைகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. இவற்றுள் ஊனுமுயிரும்போல் என்பதில் தாரகத்வ (தாங்குதல்) நியாமகத்வ (ஏவுதல்) சேஷித்வ (தலைமையாயிருத்தல்) என்ற இம்மூன்றும் பொதுத்தன்மைகளாம். ஆத்மாவானவன் சரீரத்திற்குத் தாரகனும் நியாமகனும் சேஷியாயுமிருப்பதுபோல இறைவன் அந்தராத்மாவாயிருந்து எல்லாவற்றுக்கும் தாரகனும் நியாமகனும் சேஷியாயுமிருக்கிறானென்பது பெறப்படும். உயிருமுணர்வும் போல் என்பதில் விட்டுப்பிரியாமை பொதுத்தன்மையாம். அறிவானது ஆத்மாவைவிட்டுப் பிரியாமலிருப்பதுபோல இறைவன் சேதனாசேதனங்களைவிட்டுப் பிரியாதிருக்கிறானென்பதாம்.

இங்கு ஊன் என்றதனால் ப்ராக்ருததத்வமும், உயிர் என்றதனால் ஜீவதத்வமும், உள்ளும் புறத்தும் உளன் என்றதனால் ஈச்வரதத்வமும் பெறப்பட்டதோடு, இறைவன் சேதனாசேதனங்களைச் சரீரமாகக்கொண்டுள்ளானென்பதும் விளங்குகின்றன. இதனால் பிர்ம்மமே ஸத்யம் ஜகத்மித்யை என்கிற வாதியரின் பக்ஷ

த்தை ஒப்புக்கொள்ளாதவராகி * ஸத்காரியவாதியாகிய விசிஷ்டாத்வைதிகளின் தத்வத்தை நிலைநாட்டி ஆரணியகாண்டத்தின் கடவுள் வாழ்த்திற்குத் தோற்றுவாய் செய்தாராயிற்று.

கூனும் சிறியகோத்தாயும்--மந்தரையும் கைகேயியும். கொடுமை இழைப்பக்கோல துறந்து--பொல்லாங்கைச் செய்தலால் அரசியலை விட்டு. இவர்கள் செய்த கொடுமையாவது முன்பு தமக்குத் தருவதாக மனமியைந்து வாக்களித்தபடி தசரதன்பால் வரத்தைப் பெற்று, இராமபிரானை வனஞ்செல்லும்படிசெய்த செயலாம். இச்செயலானது, தசரதன் "தேனகுமாமலர்க்கூந்தல் கௌசலையும் சுமித்திரையும் சிந்தைநோவ, கூனுருவிற்கொடுந்தொழுத்தை சொற்கேட்ட கொடியவள் தன் சொற்கொண்டின்று, கானகமே மிக விரும்பி நீ துறந்த வளநகரைத்துறந்து நானும், வானகமே மிக விரும்பிப்போகின்றேன் மனுகுலத்தார் தங்கள் கோவே" என்று மனவருத்தமுற்று உயிர்துறக்குமாறும், நகரமாந்தர் ஆராத்துயருறுமாறுஞ்செய்ததனால் இதனைக்கொடுமை என்றார். கொடுமைசெய்ததில் கூனியே முக்யகாரணமாதலால இவளை முற்கூறினார். இங்ஙனம் கொடுமை செய்த இவளை ஓர் பெண்பாலாகக் கூறுவதற்கும் வெறுப்புற்று கூன் என்று அஃறிணைச்சொல்லாற் சுட்டினார். கூனியின் சொற்கேட்ட கைகேயியையும் எதிர்மறை இலக்கணையால் இகழ்ச்சிக்குறிப்புத்தோன்ற கோத்தாய் என்றார். [கோத்தாய்--புல்லியகுணமுடையதாய்.] இவ்வாறன்றி, கொடுமை இழைப்பக்கோல் துறந்து என்பதற்கு கூனியும் கைகேயியும் பொல்லாங்கைச் செய்யும்படி தான் முன்பே கூனியின் கூனிமிருமாறு கோற்றுறந்து என்றும் பொருள் கொள்ளலாம். [கோல்--எய்கோல்.] அஃதாவது இராமபிரான் இளம்பிராயத்தில விளையாட்டாக வில்லை வளைத்து மண்ணுண்டையால் கூனியின் கூனிமிரும்படி எய்தானென்பதாம். இதனை, "பண்டைநாளிராகவன் பாணிவில்லுமிழ், உண்டையுண்டதனைத் தன்னுள்ளத்துள்ளுவாள்" என்பதனையும் அறியலாம்.

---

* ஸத்காரியவாதியர்—காரணவஸ்துவினிடத்தில் ஸூக்ஷ்மமாக ஒடுங்கியிருந்த காரியமே பின்பு ஸ்தூலரூபத்துடன் வெளிப்படுகிறதென்று சொல்லுகின்றவர். அஃதாவது—ஜகத்மித்தை பிர்ம்மமே ஸத்யம் என்று வாதிக்காமல் காரியரூபமான ஜகத்தும் ஸத்யம் என்று சொல்பவர்களென்பதாம்.

இவ்வாறன்றி, கொடுமை இழைப்ப என்பதற்குக் கைகேயி யையும் கூனியையும் *வியாஜமாக்கி அவர்கள் கொடுமை செய்யும் படிசெய்து என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். தேவர் முதலானவர்கள் இராவணாதியர் செய்யும் இடுக்கணைப் பொறுக்க லாற்றாது, பாற்கடலில் அறிதுயிலமரும் அருட்பெருங்கடலைச் சரண்புகுந்து, "ஐயிருதலையினோன் அனுசராதியாம், மெய்வலி யரக்கரால் விண்ணுமண்ணுமே, செய்தவமிழந்தன திருவினாயக, உய்திறமில்லையென்றுயிர்ப்பு வீங்கினர்" என்று வருத்தமுற்றுத் தம் குறைபாட்டைத் தெரிவித்தார்கள். அப்பொழுது கருணாகர னாகிய ஸர்வேசுவரன், அவர்களை நோக்கி "மசரதமனைவர் வரமும் வாழ்வுமோர், நிசரதகணைகளால் நீறுசெய்யயாம், கசரததுரகமாக் கடல்கொள் காவலன், தசரதன் மதலையாவருதுந்தாரணி" என்று வரமளித்தனன். இங்ஙனம் வரமளித்த ஸத்ய ஸங்கல்பனாகிய இறைவனுக்கு அயோத்தியை ஆட்சிபுரிதல் முறையன்றன்றோ! தன் ஸத்ய ஸங்கல்பத்தை நிலைநாட்டுதற்காக இராமபிரான் கூனி யும் கைகேயியும் கொடுமையைச் செய்யுமாறு தானே செய்து கொண்டான். இப்பொருள் தொனிப்பதற்கே மந்தரையைக் கூனென்றும், கைகேயியைக் கோத்தா யென்றும் கூறினர். கூன் அசேதனப்ராயையாகிய இவளாலும், அன்புமிக்கவளாகிய கைகேயி யாலும் யாது கொடுமை செய்ய இயலும்? கோத்தாய்—அன் புடைய தாயாரில் தலைசிறந்தவள். இவள் இராமபிரானிடத்தில் மிக்கவன்புடையாளென்பதை, "பராவரும்புதல்வரைப்பயக்க யாவ ரும், உராவருந்துயரைவிட்டுறுதிகாண்பரால், விராவரும்புவிக் கெலாம் வேதமேயென, இராமனைப்பயந்தவெற்கிடருண்டோவென் றாள்" என்று இராமபிரானைத் தான் பெற்ற புதல்வனாகக் கருதிய தினாலறியலாம். இதற்கேற்ப இராமபிரானும், "என்னோரின்னுயிர் மென்கிளிக்கியார் பெயரீகேன், மன்னவென்றதுமாசறுகைக்கயன்மா தேன், அன்னைதன்பெயராகெனவன்பினோடன்னாட், சொன்னமெய்ம் மொழிசொல்லுதிமெய்ம்மை தொடர்ந்தோய்" என்று கைகேயி யைப் பெற்றதாயாகவே கருதினன். இங்ஙனமிருக்கின்ற இவ்விரு

* வியாஜம்—போலிக்காரணம்,

வரும் ஒருவர்க்கொருவர் கொடுமை செய்யுமாறில்லை. ஆயினும் ஸர்வேச்வரன் தேவகாரியஞ் செய்தற்கென்றே ஸங்கல்பித்து இராமனாகவந்தவதரித்தானாதலால் இவனுடைய ஸத்யஸங்கல்பமே கைகேயின் உள்ளத்தை வேறுபடுத்தியது. இதனை, "அரக்கர் பாவமுமல்லவரியற்றிய வறமும், துரக்கநல்லருடுறந்தனள் தூய் மொழிமடமான்" என்பதனாலறியலாம். பாபபுண்ணியங்கள் ஸர்வேசுவரனுடைய நிக்ரஹாநுக்ரஹரூபங்களாயிருக்கும். இதனாலும், இராமபிரான் கைகேயியை வியாஜமாக்கி அரசியலைத் துறந்தானென்பது தெளிவாம்.

கானும்கடலுங்கடந்து—காட்டையுங் கடலையுங்கடந்து. இமையோர் இடுக்கண்காத்த—தேவர்களின் துன்பத்தை யகற்றிப் பாதுகாத்த. ஸர்வேசுவரனுக்குச் சரணாகத ஸம்ரக்ஷணமே முக்யமாதலால் கொடுமை இழைபபித்துக் காட்டையுங் கடலையுங் கடந்து தேவர்களின் இடுக்கணை யகற்றுமாறு நேர்ந்தது. ஸர்வேசுவரன் தன்ஸங்கல்பத்தால் எல்லா வுலகங்களையும் உண்டாக்கும் பேராற்றலுடையவனன்றோ! அங்ஙனமிருந்தும்ஆற்றலில்லாதவர்கள் படாத பாடுபடுவதுபோலக் காட்டையுங் கடலையுங் கடந்து காத்தானென்பதுகூடுமோவென்னில்? இறைவன் தன்ஸங்கல்பரூப ஞானத்தால் பாதுகாத்தற்கு ஆற்றலில்லாமல் படாதபாட்டைபபட்டானென்பதில்லை. கண்ணபிரான் கீதையில் சாதுக்களைப் பாதுகாத்தற்கும் துஷ்டர்களை யழிப்பதற்கும் தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் யுகங்கடோறும் வந்தவதரிக்கின்றேன் என்றருளிச்செய்தான். ஸர்வவல்லமையுடைய இவனுக்குத் தன் ஸங்கல்ப ஞானத்தால் செய்தற்கியலாமையில்லை. இங்ஙனம் செய்யாதுவிட்டமைக்கு முக்ய நோக்கமேதேனு மிருக்கவேண்டுமென்று யூகிக்கக்கிடக்கிறது. அஃதியாதோவென்றாராயுமிடத்து, இறைவனைப் புதல்வனாகப் பெறல்வேண்டுமென்றும், அவனைக் கண்ணாற்கண் டநுபவித்துக் களிக்கவேண்டுமென்றும், அநந்தவிரதங்களையும், தபசையுஞ் செய்துகொண்டிருப்பவர்களின் மனக்குறையை யகற்றுவதற்கு வந்தவதரிக்கின்றானென்பது விளங்கும். இதனைப் புஷ்பத்தைக் கொய்து இறைவன் திருவடிகளில் ஸமர்ப்பிக்கவேண்டுமென்ற பேரவாவோடு மடுவின் கரையிலிழிந்த கஜேந்திரன் முதலையின் வாயிலகப்பட்டு

ஓலமிட்ட காலத்து எம்பெருமான் விரைந்து வந்து அதனிடரை யகற்றிய விருத்தாந்தத்தாலறியலாம். இதனைக்குறித்து ஆழ்வாரும், * "மழுங்காதவைநுதியசக்கரநல்வலத்தையாய்த், தொழுங்காதற் களிறளிப்பான்புள்ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாகமலருலகில், தொழும்பாயார்க்களித்தாலுன்சுடர்ச்சோதி மறையாதே" என்றருளிச் செய்தார்.

---

* இப்பாட்டிற்கு ஈட்டிற்கண்ட உரை வருமாறு.— "மழுங்காத—சத்ரு சரீரங்களிலே படப்பட, சாணையிலேயிட்டாற்போலே புகர்பெற்றுவாராநிற்கு மாயிற்றுத் திருவாழி. மழுங்கக்கடவதன்றிக்கே கூரிய முனையையுடைய திருவாழியை. 'வடிவார்சோதிவலத்துறையும்' என்னும்படியே வலவருகேயுடையையாய், நல்வலத்தையாய் தோன்றினையே—கையிற்றிருவாழியிருந்ததறிந்திலன்; அறிந்தானாகில் இருந்தவிடத்தே இருந்து அதையேவிக் காரியங்கொள்ளானாயிறே. ஆர்த்தநாதம் செவிப்பட்டவாறே தன்னை மறந்தான். நினைத்தாலும் இருந்தவிடத்திலேயிருந்து துக்கநிவ்ருத்திபண்ணவொண்ணாது; தொழுங்காதற்களிறாயிற்று. கையுந்திருவாழியுமான அழகுகாண ஆசைப்பட்டிருக்கிறானாயிற்றிவன். காதல் களிறு—சதுர்த்தந்தி என்னுமாபோலே, காதலிதுக்கு நிரூபகமாயிருக்கை. அளிப்பான்—இதின் கையிற்பூசெவ்வியழியாமே திருவடிகளிலே யிடுவித்துக்கொள்கைக்காக. புள்ளூர்ந்து தோன்றினையே—சங்கல்பத்துக்கு முற்பட்டாயிற்று திருவடியின் வேகமிருப்பது; அவன் வேகம் போதாமல் அவனையும் இடுக்கிக்கொண்டிறே வந்து விழுந்தது. தோன்றினையே—இடர்ப்பட்டார் தாமாய், தமக்குத் தோன்றினாற்போலே காணுமிருக்கிறது. மழுங்காத ஞானமே படையாக-திருவாழியை மறந்தான் என்கைக்கு அதிலும் அண்ணிய சங்கல்பரூப ஜ்ஞானத்தையோ நினைக்கிறது. அநேக காரியங்களிலே ஏவாநின்றாலும் மழுங்கக்கடவதன்றிக்கே புகர்பெற்று வாராநின்றுள்ள சங்கல்பரூப ஜ்ஞானமே கருவியாக, திருநாபிக்கமலத்தையடியாகவுடைத்தான சம்சாரத்திலே, தொழும்பாயார்க்கு—சேஷபூதரானார்க்கு. மலருலகில் தொழும்பாயார்க்கு, மழுங்காத ஞானமே படையாக அளித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே—இருந்தவிடத்தேயிருந்து சங்கல்பரூப ஜ்ஞானத்தாலே ரக்ஷித்தாயாகில் 'ஆனையிடர்பட்ட மடுவின்கரையிலே அரைகுலையத் தலைகுலைய வுணர்த்தியற்று வந்து விழுந்தான்' என்கிற நிரவதிகதேஜஸ்வழிந்ததேயன்றோ. மறையாதே யென்றவிதுக்கு "மறையும், மறையுமென்று சிற்றாட்கொண்டான் வார்த்தை" என்பதாம்.

இன்னும், வானரவீரர்கள் அடைக்கலம் புகவந்த விபீஷணனும் வாலியைக் ‘கூடாக்கலாகாது’ என்று தடைசெய்த காலத்து, இராமபிரான் அவர்களைநோக்கி “𑌪𑌿𑌶𑌾𑌚𑌾𑌨𑍍 𑌦𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 𑌯𑌕𑍍𑌷𑌾𑌨𑍍 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂𑌚𑍈𑌵 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑍍, 𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌗𑍍𑌰𑍇𑌣 𑌤𑌾𑌨𑍍 𑌹𑌨𑍍𑌯𑌾𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍, 𑌹𑌰𑌿𑌗𑌣𑍇𑌶𑍍𑌵𑌰” “பிசாசாந் தாநவாந் யக்ஷாந் பருதிவ்யாம் சைவ ராக்ஷஸாந், அங்குல்யக்ரேணதாந் ஹந்யாமிச்சந் ஹரிகணேச்வர” என்று பிசாசங்கள், அஸுரர்கள், யக்ஷர்கள், பூமியிலிருக்கின்ற அரக்கர்களெல்லாம் திரண்டு என்னோடு பகைமைபாராட்டி எதிர்த்தாலும் அவர்களையெல்லாம் விரலுனியால் புழுவை நசுக்குவது போல நசுக்கிக் கொன்றுவிடுவேன். ஆனால் அங்ஙனஞ் செய்தற்கு விரும்பவில்லை. விரும்புவனேல் செய்துவிடுவேனென்று தன் ஸங்கல்பரூபஜ்ஞானத்தின் பெருமையை எடுத்துரைத்தான். இங்கு இராமபிரான் தன் ஸங்கல்பரூபஜ்ஞானத்தால் கார்யஞ்செய்யாமைக்குக் காரணம் யாதெனின்? நேரே பகைவர்களாகிய இராவணன் முதலானவர்கள் அடைக்கலம் புகினும் அவர்களையும் ரக்ஷிக்க வேண்டுமென்பதும், தன்னை நேரிற்கண்டு தரிசிக்கவேண்டுமென்று பேரவாவுற்றிருந்த சபரி, ஸுதிக்ஷ்ணர் முதலானவர்கட்குத் தரிசனம் தரல்வேண்டு மென்பதுமாம்.

மேலும், திரௌபதி மஹாஸபையில் ஆபத்தடைந்து தியானித்தபோது கண்ணபிரான் தன் ஸங்கல்பரூபஜ்ஞானத்தால் வஸ்திர ப்ரதானஞ் செய்தான். பின்பு கண்ணபிரான் தன்னுடைச் சோதிக்கெழுந்தருளுங் காலத்தில் ‘திரௌபதி ஆபத்துற்று நம்மைச் சரண்புக்கபோது நாம் அவள் கண்ணெதிரில் தோன்றிக் கண்ணீரைத்துடைத்து ரக்ஷிக்காதொழிந்தோம்; அவதரித்ததன் பிரயோஜனத்தைப் பெற்றோமில்லை; அந்தோ! என்னகாரியஞ்செய்தோம்’ என்று அநுதாபமுற்றான். இதனாலும் எம்பெருமான் அன்பர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்குத் தன் ஸங்கல்பரூபஜ்ஞானத்தை உபயோகப்படுத்துவதில் பெரிதும் விருப்பமில்லாதவனாயிருப்பானென்பதை வலியுறுத்தியவாறறியலாம்.

ஆக, அன்பர்களைப் பாதுகாக்கும் நிமித்தமாக வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் கூசிப்பிடிக்குமெல்லடிநோவக்

காட்டையுங் கடலையுங் கடந்தான். "மூவுலகுமீரடியான் முறை நிரம்பாவகைமுடிய, தாவியசேவடிசேப்பத் தம்பியோடுங்கான்போந்து, சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த, சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே, திருமாலசீர் கேளாத செவி யென்ன செவியே" என்று பிறரும் இராமபிரான் கான்கடந்த செயலில் ஈடுபட்டுரைத்ததும் இங்கறியத்தக்கது.

கழல்வேந்தை—திருவடியையுடைய சக்ரவர்த்தித் திருமகனை, "உள்ளுமபுறததுமுளனென்ப" என்பதனோடு கூட்டுக. கடந்து காத்தகழல என வியைந்து வேந்துக்கடையாயிற்று. கோல்துறந்து காத்தவென முதலும் சினையுக் தலைதடுமாறி நின்றன. இதனல் வேந்தைக் கரணமாககொண்டு காதத கர்த்தா கழலேயாமென கழ லின் பெருமை கூறியவாறாயிற்று. ஆகவே கழலையுடைய வேந்தின் பெருமை கூறுதே யமையும். இங்குக் கழல்வேந்தெனவே உலகி லுள்ள வேந்திற்கும், இவ்வேந்திற்குமுள்ள வேறுபாடுணர்த்திய வாறு காண்க. உலகிலுள்ள வேந்தர்கள் தம்மிடத்தில் வேந்தாதற் றன்மையுளதென்பதை முடிசூட்டிக் காட்டுவார்கள். ஆதலால முடியே அவர்களை நிரூபித்துக்காடடுவதற்குரியதாயிருக்கும. இவ் வேந்துக்குக் கழலே நிரூபகதர்மமாயிருக்கு மாதலால கழலை ஹேதுகர்ப்ப விசேஷணமாகக் கொள்க.

இஃதன்றித் திருவடிகளே திருவுலகளந்து எல்லார் தலையிலு மடியிட்டுய்யச்செய்தன. அவனது ஸ்ரீபாதரேணுவால் அகலிகை கல்லுரு நீங்கப்பெற்றுப பெண்ணுருவுற்றாள். திருவடி தீண்ட சகடாசுரன் மாய்ந்தொழிந்தான். இதனுன் நிக்ராஹாநுக்ரஹத் தைசசெய்தற்கு அவன் வேண்டா; அவனது திருவடிகளே சாலத் துணையாயிருக்குமென்பது பெறப்படும். இதனுனன்றோ "தன்னிற் சிறந்ததன்றாளிணை" என்றும், "பிராட்டியும் அவனும் விடினும் திருவடிகள் விடாது; தின்கழலாயிருக்கும்" என்றும, "துயரறு சுடரடி" என்றும் அருளிச செய்தார்கள்.

இபபாட்டிலுள்ள 'என்ப' என்ற பலர்பால்வினைமுற்றிற்கு ஆப்தாகள் என்ற வினைமுதலை வருவிக்க. கானுங்கடலுங் கடந்து இமையோர்இடுக்கண்காத்த கழல்வேந்தனுகிய சக்கரவர்த்தித் திரு

மகனை எல்லா வஸ்துக்களுள்ளும் புறம்பும் வியாபித்துள்ள நாராயணன் என்று ஆப்தர்கள் சொல்லுவார்க ளென்பதாம். இங்கு ஆப்தவாக்யத்தால் உரைத்ததன் காரணம் யாதெனின்; இராமபிரான் சீதையின் பிரிவாற்றாமையாலடைந்த துன்பத்திற்கோரளவில்லை; இங்ஙனம் துன்புற்ற இவன் பரதேவதையாவனோ வென்ற சங்கையுண்டாக அதைப் பரிகரிப்பதற்காக ஆப்த வசனத்தாற் கூறினாரென்க. இஃதன்றி என்ப என்ற பிறர்கூற்றால் 'ஆப்தர் இராமபிரானை நாராயணன் என்று சொல்லுவார்கள்; அந்த நாராயணனைக் காட்டிலும் இராமபிரான் சிறந்தவனென்பது எனது கருத்தாம்' என்ற பொருளும் விளங்குகிறது. இதனால கவி விபவத்திற்குப பரத்வம் கூறினாராயிற்று.

வானின்றிழிந்து காத்த வேந்து என வியைத்து பரமாகாசமாகிய பரமபதத்திலிருந்து அவதரித்து எனப்பொருள் கொண்டு பாலகாண்டத்தின் வரலாற்றைத் தெரியவைத்தார். கூனுஞ்சிறிய கோத்தாயும் கொடுமை இழைபபக் கோற்றுறந்து என்றதனால அயோத்தியாகாண்ட சரிதத்தை உணர்த்தினார். கானுங்கடந்து என்றதனன் ஆரணியகாண்ட நிகழ்ச்சியைக்குறிபபிட்டார். கடலுங் கடந்து என்றதனன் சுந்தரகாண்ட வரன்முறையை விளக்கினர். இமையோரிடுக்கண்காத்த என்றதனன் யுத்தகாண்ட இயைபை இயம்பினர். ஆக, இக்கடவுள் வாழ்த்தினால் எல்லாக் காண்டத்தினிகழ்பொருளுமுரைத்துப் பயிலவோர் பலருக்கும் நூலின் பருப்பொருள் எளிதிற் பதியுமாறு பெரிதும் பயனுறச் செய்தனர்.

தொடரும்.

ஸ்ரீ:

நம்பிள்ளை வைபவம்.

(57-ம் பக்கத்தொடர்ச்சி.)

பிள்ளைலோகாசாரியரும், அழகியமணவாளப்பெருமாள் நாயனாரும் அவதரித்த வரலாறு.

நம்பிள்ளை ஒருநாள் வழக்கம்போல் நித்யப்படி நடைபெற்று வரும் காலக்ஷேபாதிகள் நிறைவேறினபின்பு மத்தியான்னகாலத்தில் தனியே எழுந்தருளியிருந்தனர். அப்போது ஓர் அம்மையார் வந்து பிள்ளை திருவடிகளிலே தெண்டனிட்டு நின்றனர். அவ்வம்மையார் திருநாமம் அம்மியம்மாள் என்பது. அவர் வடக்குத்திருவீதிப் பிள்ளையின் திருத்தாயாராவர். பிள்ளையும் அவ்வம்மையாரை விசேஷகடாக்ஷம் செய்தருளி, பின்பு அவரை நோக்கி உம்முடைய க்ருஹயோகக்ஷேமங்கள் என்னவென்று கேட்டருளினர். அம்மையாரும் ஸ்வாமீ! என்ன விண்ணப்பஞ் செய்யப்போகிறேன். அடியேனுடைய குமாரன் ஒரு பேய்ப்பிள்ளையாயிருக்கிறதேயென்று வருத்தத்துடன் கூறினர். பிள்ளையும் அதுகேட்டு ஏன் அவ்வாறு கூறுகின்றீர் என்ன, அம்மையார் கூறுவார்;

தேவரீர் அடியேன் குமாரனுக்கு ஒரு பெண்ணை விவாஹம் பண்ணியருளிற்றன்றோ? அந்தப் பெண் பெரியவளானதும் ஸஹஸயனகல்யாணம்போலே பண்ணி ஸயிக்கவிட, உடனே வடக்குத் திருவீதிப்பிள்ளை அலறிமுறையிட்டான். அதென்னென்று எல்லாரும் உட்புகுந்து பார்த்தவளவில் பிள்ளை உடம்பெல்லாம் வியர்வை நீர்சொரிய விக்கியழுது நிற்பதைக்கண்டோம். அப்பொழுது நான் அவனை நோக்கி பிள்ளாய்! இதென்னென்று கேட்டேன். அதற்கவன் அம்மா! இதொரு ஆடுகின்ற பாம்பாயிருந்தது என்று பயப்பட்டுக் கூப்பிடுகின்றேன்; இன்னமும் அப்படியேயிருக்கிறதென்று மறுமொழி பகர்ந்தனன். அதுகேட்டு இதுவும் ஒரு புதுமையோ வென்று பெண்ணை அப்பாலே போகவிட்டேன். பின்னையும் ஒரு நாள் அவ்வாறேயாயிற்று; என்று அம்மையார் வியாகுலத்துடன்

விண்ணப்பித்தனர். அதுகேட்ட நம்பிள்ளையும் சிரித்தருளி அதனால் உமக்கென்னென் றருளிச்செய்தனர். அம்மியம்மாளும் ஸ்வாமீ! இப்படி யருளிச்செய்யலாமோ? பெண் வாழவேண்டாவோ? வமிசத்திற்குப் பிள்ளை வேண்டாவோ? என்று பிள்ளை திருவடிகளிலே சாஷ்டாங்கமாக விழுந்து மிகவும் சோகித்தனர்.

அதுகண்ட நம்பிள்ளை அம்மியம்மாளை நோக்கி அம்மி! எழுந்திரு. சோகிக்கவேண்டாம்; நீ உன் மருமகளை அவள் ருதுஸ்நானம் செய்துவரும்போது இவ்வழியே அழைத்துவா; என்றருளிச்செய்து போகவிட்டனர். அவ்வம்மையும் அவ்வாறே சென்று பிள்ளை நியமனத்தின்படியே பின்பொருநாள் மருமகளை அழைத்துவர, இருவரும் தெண்டனிட்டு நின்றனர். நம்பிள்ளையும் தமது திருவோலக்கத்தில் அந்தப்பெண்ணை (வடக்குத்திருவீதிப்பிள்ளையின் தேவிகளை) அண்டையில் அழைத்தருளி, அவள் வயிற்றைத் திருக்கைகளாலே தீண்டி, அம்மே! நம்மைப்போலேயிருப்பானொரு பிள்ளையைப் பெறக்கடவாய்; என்று ஆசீர்வதித்தருளினார். பின்னையும் நம்பிள்ளை அன்றுமாலை வடக்குத்திருவீதிபிள்ளையை யழைத்தருளி உம்முடைய பயமும் தீர்ந்தது. * விஹிதவிஷய வைராக்யத்திற்கும் சிறிதுங் குறைவு வராது; ஆயினும் உலகமரியாதையைக் கருதி நாம் சொன்னதற்காக இன்றிரவு உமது தேவியுடன் கூடியிருமென்று பணித்தருளினர். அவரும் பிள்ளையின் கட்டளையை மறுத்தற்கஞ்சி அவ்வாறே செய்தனர். அவரது தேவி ஆய்ச்சியம்மாளும் கருவுற்றுப் பன்னிரண்டாம் மாதத்தில் ஐப்பசியில் திருவோணநக்ஷத்திரத்தில் லோக விலக்ஷணமான ஒரு பிள்ளையைப் பெற்றாள்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை உலகுய்யப்பிறந்த அப்பிள்ளைக்கு, பத்துநாளுங்கடந்த இரண்டாம் நாளில் லோகாசாரியர் பிள்ளை

---

* விஹிதவிஷயம்—விதிக்கப்பட்ட விஷயம். வைராகயம்—ஆசையின்மை. எல்லோர்க்கும் தமக்குரிய மனைவியரோடுகூடி மகிழ்தல் குற்றமன்றென்று நூல்கள் கூறும். ஆனால், ப்ரபன்னருக்கு அதுவுங்கூடாதென்று விதிக்கப்பட்டுளது. இதனை, "ப்ரபன்னனுக்கு விஹிதவிஷய நிவ்ருத்தி தன்னேற்றம்" என்ற ஸ்ரீவசனபூஷண வாக்கியத்தாலும் அறியலாம்.

யென்று நம்பிள்ளையினது திருநாமம் சாத்தினர். குழந்தையும் சக்ரவர்த்தித் திருமகனைப்போல் வளர்ந்து வந்தது. பின்பு ஓராண்டு கழிந்தவாறே ஆண்டு நிறைவுவிழாவும் பெருக்க நடைபெற்றது. அப்பொழுது அவ்வுத்ஸவத்தில் பெருமாளை ஸேவிக்கப்பண்ணி வைக்கும்பொருட்டு நம்பிள்ளை முதலிய பெரியோர்களெல்லாரும் அக்குழந்தையை மங்களவாத்தியங்களுடனே பல்லக்கிலே யெழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டுபோய் நம்பெருமாளை ஸேவிக்கப் பண்ணுவித்தனர். பெருமாளும் மிகவும் திருவுள்ளமுகந்தருளி தீர்த்தம் ஸ்ரீசடகோபன் சந்தனம் சுகந்தம் திருமாலை முதலியனவும் பிரசாதங்களும் பட்டுசிற்றுடைகளும் வழங்கியருளி அர்ச்சகர் முகமாய் நம்பிள்ளையை நோக்கி உம்மைப்போல் ஒரு பிள்ளை கொடுத்தீர்; இனி நம்மைப்போலே ஒரு பிள்ளை கொடும்; என்று பணித்தருளினர். பிள்ளையும் நாயன்தே என்று * ஓமறைந்தனர். அப்படியே வடக்குத்திருவீதிபிள்ளைக்குப் பின்னும் ஓர் திருக்குமாரர் அவதரித்தனர். அவருக்குப் பெருமாள் திருவுள்ளப் படியே அழகியமணவாளப்பெருமாள்நாயனார் என்று திருநாமஞ் சூட்டினர். இவ்வரலாற்றினைச் சுருக்கி ஸ்ரீமணவாளமாமுனிகளும்,

> பின்னைவடக்குத்திருவீதிப்பிள்ளையன்பால்
> அன்னதிருநாமத்தையாதரித்து—மன்னுபுகழ்
> மைந்தருக்குசசாற்றுகையால்வந்துபரந்ததெங்கும்
> இநத்திருநாமமிங்கு.

என்று கூறியருளினர். இவர்களிருவரும் பெருமாளையும் இளைய பெருமாளையும்போல உலகுய்யுமாறு வளர்ந்து பலகலைகளிலும் வல்லவர்களாகிச் சம்ப்ரதாய நிர்வாஹம் நடாத்திவந்ததுடன் ஸம்ப்ரதாயத்திற்கின்றியமையாத பல ரஹஸ்ய நூல்களையும் அருளிச் செய்து தரிசனத்தையும் உலகத்தையும் வாழ்வித்தருளினார்கள்.

இவர்களில மூத்தவரான லோகாசாரியபிள்ளை அருளிசசெய்தவைகளில முக்யமானவை "அஷ்டாதச ரஹஸ்யங்கள்" என்னும் பதினெண் ரகசியங்களாம். அவற்றுள்ளும் தலைசிறந்த பெருமையுடையது "ஸ்ரீவசனபூஷணம்" என்னும் ஸம்ப்ரதாய சாஸ்

* ஓமறைதல்—ஸம்மதி தெரிவித்தல்.

திர ரத்தினமே. இதனை ஸ்ரீமணவாளமாமுனிகள் முதலிய நம் பரமாசார்யர்கள் தம் திருமுடி மேற்கொண்டு போற்றிப் புகழா நிற்பர்கள். ஆய் முதலிய ஆசிரியர்கள் இதற்கு நல்லுரை கண்டனர். இந்நூலின் பெருமை உலகிற்கு நன்கு விளங்குமாறு ஸ்ரீமணவாள மாமுனிவர் இதற்குச் சிறந்ததோர் பேருரை வகுத்தருளினர். *

---

* இதுபற்றி ஸ்ரீவசனபூஷண வியாக்யானத்தில் ஸ்ரீமணவாளமாமுனிவர் அருளிச்செய்யும் ஐதிகம் வருமாறு—

பேரருளாளப்பெருமாள் தம் நிர்ஹேதுக கிருபையால் மணப்பாக்கம் என்ற ஊரிலெழுந்தருளியிருந்த திருச்சாணூர் நம்பியை விசேஷ கடாக்ஷஞ் செய்தருளி ஆத்மோஜ்ஜீவன ஹேதுவான அர்த்தவிசேஷங்களை அவர் ஸ்வப்பநத்தில் அருளிச்செய்து 'நீவிர் இரண்டாற்றிற்கும் நடுவே (ஸ்ரீரங்கத்தில்) வர்த்திக்கக்கடவீர்; இன்னும் இவை போன்றனவாகிய அர்த்தங்களெல்லாம் மிகவும் தெளிவாக நாம் அவ்விடத்திலே சொல்லுகிறோம்' என்றார் இது கேட்ட திருச்சாணூர் நம்பி ஸ்ரீரங்கம் வந்து பெருமாளை ஸேவித்துப் பேரருளாளர் தமக்கு முன்னருளிய அர்த்தவிசேஷங்களை ஏகாந்தமாயிருக்கிற கோயில் உட்பிரகாரத்தில் ரஹஸ்யமாக அநுஸந்தித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பிள்ளைலோகாசார்யர் தம்முடைய அந்தரங்க சிஷ்யர்களுடன் எழுந்தருளி அவ்விடம் ஏகாந்தமாயிருப்பதறிந்து அவ்விடத்தில் தம் சிஷ்யர்கட்கு ரஹஸ்யார்த்தங்களை அருளிச்செய்தார்.

அதுபொழுது திருச்சாணூர் நம்பி அவ்வர்த்தங்களைச் செவி மடுத்து அவையனைத்தும் முன்பு தமக்குப் பேரருளாளர் அருளிச்செய்தனவாகவே யிருக்கக்கண்டு உள்ப்ரகாரத்திலிருந்து வந்து பிள்ளைலோகாசார்யர் திருவடிகளில் மிக்க பரவசத்துடன் தண்டன்ஸமர்ப்பித்து நின்று 'அவரோ நீர்' என்று தாழ்மையுடன் வினவினர். லோகாசார்யர், 'அவர் யாவரென்ன' அப்பொழுது இவர் பேரருளாளப்பெருமாள் தமக்கு இவ்வர்த்தவிசேஷங்களையருளிச்செய்ததையும், இவ்விடத்தில் வர்த்திக்கும்படி நியமித்ததையும் இன்னும் இவ்வர்த்தங்களைத் தெளிவாக இவ்விடத்திலருளிச்செய்வதாக உரைத்ததையும் விண்ணப்பஞ் செய்தனர்.

பின்னர் லோகாசார்யரும் நம்பியாரை அபிமானித்தருள இவரும் அன்று முதல் அவருக்கு அந்தரங்கசிஷ்யராய் வர்த்தித்துவந்தனர். இவ்வாறு வாழ்ந்து வருகிற காலத்தில் பெருமாள் இவரது ஸ்வப்பனத்தில் 'பிள்ளை யுரைத்த அர்த்தங்கள் மறந்துவிடாமலிருக்க அவற்றை ப்ரபந்தரூபமாக்கச்சொன்னோமென்று நீவிர் பிள்ளையிடத்திற் சொல்வீர்' என்று அருளிச்செய்தார். இவரும் அவ்வாறே லோகாசார்யரிடத்தில் விண்ணப்பஞ்செய்ய லோகாசார்யர்

இனி இளையவராகிய அழகியமணவாளப்பெருமாள்நாயனா ரருளிச்செய்த நூல்களில் "ஆசார்ய ஹ்ருதயம் என்னும் நூல் மிகவும் ஏற்றமுடையது. இதற்கும் சில நல்லுரைகளுமுண்டு; ஸ்ரீ மணவாளமாமுனிவரது அழகியவுரை பெரியோர்களால் மிகவும் கொண்டாடப்பட்டு வருகிறது. *

அன்னபுகழ்முடும்பையண்ணலுலகாசிரியன்
இன்னருளாற்செய்தகலையாவையிலும்—உன்னில்
திகழ்வசனபூடணத்தின்சீர்மையொன்றுக்கில்லை
புகழலவிவ்வார்த்தைமெய்யிப்போது.

முன்னம்குரவோர்மொழிந்தவசனங்கள்
தன்னைமிகக்கொண்டுகற்றோர்தம்முயிர்க்கு—மின்னணியாச்
சேரச்சமைத்தவரேசீர்வசனபூடணமென்
பேரிக்கலைக்கிட்டார்பின்.

ஆர்வசனபூடணத்தினாழ்பொருளெல்லாமறிவார்
ஆரதுசொன்னேரிலனுட்டிப்பார்—ஓரொருவ
ருண்டாகிலத்தனைகாணுள்ளமேயெல்லார்க்கும்
அண்டாததன்றோவது.

உய்யநினைவுடையீருங்களுக்குச்சொல்லுகின்றேன்
வையகுருமுன்னம்வாய்மொழிந்த—செய்யகலை
யாம்வசனபூடணத்தினாழ்பொருளைக்கற்றதனுக்
காம்நிலையில்நில்லுமறிந்து.

தேசிகர்பாற்கேட்டசெழும்பொருளைச்சிந்தைதன்னில்
மாசறவேயூன்றிமனனஞ்செய்து—ஆசரிக்க

'பெருமாள் திருவுள்ளம் அப்படியிருக்குமாகில் அங்ஙனமே செய்கிறேன்' என்று திருவுள்ளம்பற்றி இப்பிரபந்தத்தை வெளியிட்டருளினார் என்பதாம்.

இதனால் பிள்ளைலோகாசார்யர் பெருமாளின் அவதாரமென்றும் அவரருளிய ரஹஸ்ய நூல்கள் பெருமாள் திருவுள்ளத்தால் அவதரித்தனவென்றும் விளங்குதல் காண்க.

* அழகியமணவாளப்பெருமாள்நாயனா ரருளிச்செய்தனவாகத் திருப்பாவை வியாக்யானமும், கண்ணிநுண்சிறுத்தாம்பு வியாக்யானமும் வழங்குகின்றன. வேறு சிலவும் உண்டென்பர். "வையகுருவின் தம்பிமன்னு மணவாளமுனி, செய்யுமவைதாமுஞ்சில" என்றருளிச்செய்தது காண்க.

வல்லார்கள்தாம்வசனபூடணத்தின்வான்பொருளைக்
கல்லாததென்னேகவர்ந்து.

"சச்சம்பிரதாயம்தாமுடையோர்கேட்டக்கால்
மெச்சும்வியாக்கியைதானுண்டாகில்—நச்சி
அதிகரியும்சீர்வசனபூடணத்துக்கற்ற
மதியுடையீர்மத்தியத்தராய்.

"சீர்வசனபூடணத்தின்செம்பொருளைச்சிந்தைதன்னால்
தேரிலுமாம்வாய்கொண்டுசெப்பிலுமாம்—ஆரியர்காள்
என்றனக்குநாளுமினிதாகாநின்றதையோ
உந்தமக்கெவ்வின்பமுளதாம்.

என்று பலபடப்பாராட்டியருளாநிற்பர் ஸ்ரீ மணவாளமாமுனிவரும்.

நிற்க; திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களின் நிர்வாஹங்களான வியாக்யானங்கள் பலவற்றுக்கும் நம்பிள்ளையே மூலகாரணரென்பது முன்பே விளக்கப்பட்டது. இனி ஸ்ரீவசன பூஷணம் ஆசார்யஹ்ருதயம் முதலான அரிய ரஹஸ்ய நூல்கள் பலவற்றிற்கும் நம்பிள்ளையின் திருவருளே மூலகாரணமாயிருந்த தென்பது சொல்லாமலே பெறப்படும். தெளிந்த சுத்த ஸம்ப்ரதாயம் இப்பெரியார் காலத்திலேயே தோன்றி வளரலாயிற்றென்று ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர் பணியாநிற்பர்.

நம்பிள்ளை அன்னசுத்திசெய்துகொண்ட வரலாறு.

நம்பிள்ளைக்கு இரண்டு தேவிகளுண்டு. அவர்களில் மூத்ததேவிகள் ஒருநாளும் இளைய தேவிகள் ஒருநாளுமாகத் தளிகை செய்து வருவது வழக்கம். இங்ஙனம் நடைபெற்று வருகிற நாள்களில் ஒருநாள் நம்பிள்ளை மூத்ததேவிகளையழைத்து நீ நம்மைக்குறித்துக் கருதியிருப்பதெவ்வாறு சொல்லாய் என்று வினவியருளினர். அது கேட்ட தேவிகளும் தொழுது நின்று அச்சமும் நாணமும் பின் பற்ற மிகவும் பணிவுடன் அவரை நோக்கி, தேவரீரை நம்பெருமாளுடைய * அபராவதாரமென்றும் அடியேனுக்கு ஆசார்யரென்றும், தேவரீர் திருவடிகளிற் செய்யுந் தொண்டுகள் உயிர்க்குப் பற்

* அபராவதாரம்—இரண்டாம் அவதாரம்.

றக்கோடான ஆசாரியன் அடித்தொண்டென்றும் நினைத்திருப்பே னென்று விண்ணப்பித்தனர். அதுகேட்ட பிள்ளையும் நல்லதென்று அவரைச் செல்லுமாறு பணித்து, இளைய தேவிகளை யழைத்து அவரை நோக்கி நீ நம்மை நினைத்திருப்பதெவ்வாறு என்று கேட்டருளினர். அத்தேவிகளும் அச்சத்துடனும் நாணத்துடனும் அவரை நோக்கித் தேவரீர் பர்த்தா; அடியேன் பார்யை; என்றன்றோ நினைத்திருப்பது என்று பணிவுடன் விண்ணப்பித்தனர். அதுகேட்டு, பிள்ளை, மூத்த தேவிகளை நாள்தோறும் பெருமாளுக்குத் தளிகை செய்யுமாறும் இளைய தேவிகளை அதற்குரிய பணிவிடைகள் செய்யுமாறும் நியமித்தருளினர். இங்ஙனம் நடந்துவரும் பொழுது மூத்ததேவிகள் திருமாளிகைக்கு விலக்கான காலங்களில் இளையதேவிகள் தளிகைசெய்ய நேரும். அப்பொழுது எம்பெருமானைத் திருவடி விளக்கி யமுதுசெய்தருளப்பண்ணிப் பின்பு தமக்குமிகவும் உகந்தவரும், ஞானத்தால் மேம்பட்டவரும், வேதகப் பொன்போன்றவரும் பரமசத்வநிஷ்டரும் ஸ்ரீ வைஷ்ணவர்களில் தலைசிறந்தவருமான பிள்ளைஏறுதிருவுடையதாசர் என்னும் பெரியாரது திருக்கைகளால் தீண்டுவித்து (கரஸ்பர்சமாக்கி) அதனை அமுது செய்தருளுவர். * இதனால் இளைய தேவிகளுக்குப் பாவசுத்தி போதாதாகையால் பெருமாளுக்குக் கண்டருளப்பண்ணினும் நியமமுடைய நல்லோர் கரஸ்பர்சமும் மிகவும் அவசியம் என்பது பெறப்படும்.

நம்பிள்ளைக்கு இளைய தேவிகளிடத்தில் ஒரு குமாரர் அவதரித்தனர். அதனைப் பிள்ளை திருவடிசம்பந்திகளான சில வைஷ்ணவர்கள் வந்து பிள்ளை ஸந்நிதியில் விண்ணபபித்தனர். அதுகேட்டு அருகிருந்த திருப்பேராச்சான் அடியேனுக்கு ஒரு திருத்தமைய

---

* "யாகாநுயாக உத்தரவீதிகளில் காயான்ன ஸ்தல சுத்திபண்ணின வ்ருத்தாசாரமறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது" என்ற ஆசார்யஹ்ருதய வாக்யமும், "................. ..... பகவதாராதனானந்தரம் தத்ஸமாப்திரூபேணபண்ணப்படுமதாகையாலே அநுயாகசப்தவாச்யமான ப்ரஸாத ஸ்வீகாரத்தில் பிள்ளையேறுதிருவுடையார் தாஸர் கரஸ்பர்சத்தாலே அன்னசுத்திபண்ணின நம்பிள்ளையும்... ...." என்ற ஸ்ரீமணவாளமாமுனிவரருளிய வியாக்யானமும் இங்கு நோக்கத்தக்கன.

ஞர் அவதரித்தாரென்று உகந்தருளினரென்பர். ஆசார்ய புத்ரர் பின் பிறந்தவரேயாயினும் மிகவும் மூத்தவராக மதிக்கத்தக்கவ ரென்பதீ கருத்தாயிற்று. * பின்பு பிள்ளையும் அக்குழந்தைக்கு ஜாதகர்மம் முதலியன செய்து பன்னிரண்டாம் நாள் நாமகரணத் திலே தூவியம்புள்ளர் என்று திருநாமஞ் சாத்தியருளினர் என்பர்.

தொடரும்.

ரெ. இராமையங்கார்,
தலைமைத்தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல்,
மதுரை.

ஸ்ரீ:

பாகவதாபசாரம்.

(5-வது தொகுதியின் 99-ம் பக்கத்தொடர்ச்சி.)

(17) ப்ராஹ்மண்யம் விலைச்செல்லுகிறது வேதாத்யயனாதி முகத்தாலே பகவல்லாபஹேதுவென்று; அது தானே இழவுக் குறுப்பாகில் த்யாஜ்யமாமிறே.

* ஸ்ரீஆண்டாள் திருமாலிருஞ்சோலை எம்பெருமான்விஷயத்தில் "நூறு தடாரம் அக்காரவடிசில் சொன்னேன்" என்ற தம்திருவுள்ளத்தை நிறை வேற்றியருளிய ஸ்ரீபெரும்பூதூர் முனிவரரை, 'நங்கோயில்அண்ணர்' என் றழைத்தருளினதும், அதுபற்றி ஸ்ரீ ஆண்டாளைப் பின்புள்ள ஆசிரியர்கள் "பெரும்பூதூர்மாமுனிக்குப்பின்னானாள்" என்று கொண்டாடியதும் இங்கு நோக்கத்தக்கன.

(17) முன், "இது தனக்கு அதிகாரி நியமமில்லை" என்றும், "தமர் களிற்றலைவராயசாதியந்தணர்கள்" என்றும், "இதில் ஜன்மவ்ருத்தாதி நியம மில்லை" என்றும் உரைக்கப்பட்டன. சாஸ்திரங்களில் ப்ராஹ்மண்யத்தை மிகவும் உயர்வாக விரும்பிசொல்லியிருக்க, அதற்கு விரோதமாக ஜன்மாதி களால்வரும் உயர்வு பிரயோஜனமில்லையென்று சொல்லலாமே என்னும் சங்கையுண்டாக, "ப்ராஹ்மண்யம் விலைச்செல்லுகிறது" என்று தொடங்கி, "ஆகையால் உத்க்ருஷ்ட ஜன்மமே சிரேஷ்டம்" என்பதுவரை அச்சங்கை யைப் பரிகரிக்கின்றார்.

ப்ராஹ்மண்யம் விலைச்செல்கிறது என்றது ப்ராஹ்மண்யம் விருப்பத்திற்கு விஷயமாவது என்றவாறு. அஃதாவது விரும்பப்படுவது என்று பொருள். வேதாத்யயனாதி முகத்தாலே பகவல்லாபஹேதுவென்று என்றது வேதத்தை அத்யயனஞ்செய்து பின்பு அதனுடைய அர்த்தத்தை நிச்சயித்து பகவத்பக்தி முதலிய சாதனங்களை அநுஷ்டித்துப் பகவத் விஷயத்தைப் பெறுகைக்குப் பரம்பராக் காரணமாயிருப்பதால் என்றவாறு. வேதாத்யயனாதிமுகததாலே பகவல்லாபஹேதுவென்று ப்ராஹ்மண்யம் விலைசெல்லுகிறதென்று வாக்யத்தை முடித்துக்கொள்க. ப்ராஹ்மண்யம் ஸம்ஸ்காரமூலமாய் வேதாத்யயனத்திற்குக் காரணமென்றும், வேதாத்யயனம் அர்த்தநிச்சயத்திற்குக் காரணமென்றும், அர்த்தநிச்சயம் பக்தி முதலிய உபாயாநுஷ்டானத்திற்குக் காரணமென்றும், உபாயாநுஷ்டானம் பகவத் ப்ராப்திக்குக் காரணமென்றும் வாக்யத்தின் தாத்பர்யம். இவற்றுள் பகவத் ப்ராப்திக்கு நேரே காரணம் உபாயாநுஷ்டானம். அந்த உபாயாநுஷ்டானத்திற்குக் காரணம் அர்த்தநிச்சயம். அவ்வர்த்தநிச்சயத்திற்குக் காரணம் வேதாத்யயனம். அந்த வேதாத்யயனத்திற்குக் காரணம் ப்ராஹ்மண்யமாதலால் பகவத் ப்ராப்திக்கு அந்தப்பிராஹ்மணயம் பரம்பராக் காரணமென்றுரைக்கப்பட்டது. இவ்வாறு பகவத் ப்ராப்திககுக்காரணமாவதால் ப்ராஹ்மண்யம் விரும்பப்படுகின்றதென்று வாக்யத்தின் போந்தபொருளாம். இவ்வாக்யத்தால் ப்ராஹ்மண்யத்திலுள்ள அநுகூலத்தன்மையை அருளிச்செய்தார். இனி இந்த ப்ராஹ்மண்யத்திலுள்ள பிரதிகூலத்தன்மையை அருளிசசெய்கிறார் "அதுதானே" என்று.

அதுதானே என்றது முற்கூறியவாற்றால் பகவத் ப்ராப்திக்குசாதனமாயுள்ள ப்ராஹ்மண்யந்தானே என்றவாறு இழவுக்குறுப்பாகில் என்றது அஹங்கார ஹேதுவாய் பகவதத்யந்த நிக்ரஹத்துக்குக் காரணமான பாகவதாபசாரத்தைச்செய்து பகவத் விஷயத்தை இழப்பதற்குக் காரணமானால் என்றவாறு. ப்ராஹ்மணயததால் 'நான் ப்ராஹ்மணன்' என்னும் அஹங்காரமும், அந்த அஹங்காரத்தால் இழிந்த வர்ணத்திற் பிறந்த பாகவதர்களைக் கண்டால் பகவத் ஸம்பந்தத்தைக்கொண்டு கௌரவப்படுத்தாமல் ஜாதிமாத்திரத்தைக்கொண்டு அவமதிப்பும், அதனால் பாகவதாபசாரமும், அதனால் பகவந் நிக்ரஹமும், அதனால் பகவத்விஷயத்தை இழக்கையுமாம். இங்கு, பகவத் விஷயத்தை இழப்பதற்கு நேரே காரணம் பகவந்நிக்ரஹம். அதற்குக்காரணம் பாகவதாபசாரம். அதற்குக் காரணம் பாகவதாவமதிப்பு. அதற்குக்காரணம் அஹங்காரம். அதற்குக் காரணம் ப்ராஹ்மண்யமாதலால் இவ்விடத்திலும் பகவத் விஷயத்தை இழப்பதற்குப் ப்ராஹ்மண்யம் பரம்பராக் காரணமென்று அறியத்தக்கது.

(18) ஜந்மவ்ருத்தங்களினுடைய உத்கர்ஷமும் அபகர்ஷமும் பேற்றுக்கும் இழவுக்கும் அப்ரயோஜகம்.

இதுவரை உரையாசிரியரின் கருத்தைக்கொண்டு உரையெழுதலாயிற்று. இனி, நூலாசிரியர் பின்னருளிச்செய்த வாக்யங்களின் கருத்தை நோக்குமிடத்து இவ்வாக்யத்திற்கு மற்றோர் அர்த்தமும் தோற்றுகிறது. அது வருமாறு:—

பகவதநந்யார்ஹ சேஷத்வத்தை விஷயம்செய்யும் ஞானத்தை (பகவதநந்யார்ஹ சேஷபூதன் நான் என்னும் பகவத்ஸம்பந்தரூபமான ஞானத்தை)த் தலையெடுக்கவிடாமல் அநித்யசரீரத்திலிருப்பதான ஜாதியை விஷயம்செய்து கொண்டு 'நான் ப்ராஹ்மணன்' என்னும் ஞானம் தோற்றுவதால் இந்த ஞானம் நேரே பேற்றுக்குச்சாதனமான பகவத்ஸம்பந்தத்திற்கும் ப்ரதிபந்தகமாம். 'நான் ப்ராஹ்மணன்' என்னும் அந்த ஞானத்திற்கு ப்ராஹ்மண்யம் விஷயரூபகாரணமாதலின் அந்த ப்ராஹ்மண்யம் 'இழவுக்குறுப்பாகில்' என்றருளிச்செய்யப்பட்டது. 'பகவதநந்யார்ஹசேஷபூதன் நான்' என்னும் ஞானமே பேற்றுக்கு நேரே சாதனமான பகவத்ஸம்பந்த ஸ்வரூபம் என்பதை "ப்ரயோஜகம் பகவத்ஸம்பந்தமும், அஸம்பந்தமும்" என்னும் 209-வது வாக்யத்திலுள்ள பகவத்ஸம்பந்த பதத்திற்கு வியாக்யாதா "நாம் பகவதநந்யார்ஹ சேஷபூதர் என்றிருக்கையாகிற பகவத் ஸம்பந்தம்" என்றருளிச் செய்திருப்பதாலறிக. இதனால் 'பகவதநந்யார்ஹ சேஷபூதன் நான்' என்னும் ஞானமே பகவத் ஸம்பந்தமென்பது பொருள். ஸம்பந்தவிஷய ஞானத்தை ஸம்பந்தம் என்று லக்ஷணையாக அருளிச்செய்யப்பட்டது. 'நான் ப்ராஹ்மணன்' என்னும் ஞானம் பகவத் ஸம்பந்தத்திற்குப் பிரதிபந்தகமென்பதை 'அதற்கு ஸ்வரூப ப்ராப்தமான நைச்சியம் பாவிக்கவேணும்' என்னும் மூலவாக்யத்தின் உரையிற் காண்க.

த்யாஜ்யமாமிறே என்றது விடத்தக்கது என்றவாறு. எது பகவத் ப்ராப்திக்குக் காரணமோ அது விரும்பத்தக்கது. எது பகவத் ப்ராப்திக்குப் பிரதிபந்தகமாமோ அது விடத்தக்கது. இந்த ப்ராஹ்மண்யமும் பகவத்ப்ராப்திக்குச் சாதனம் என்று சாஸ்திரங்களால் விரும்பப்பட்டது. அதுதானே (அந்த ப்ராஹ்மண்யந்தானே) பிரதிபந்தகமாகில் விடத்தக்கதேயாம். இவ்விரண்டு வாக்யங்களாலும் சாஸ்திரங்கள் விரும்பியதற்குக்காரணமும், நூலாசிரியரின் அநாதரத்திற்குக் காரணமும் அருளிச்செய்யப்பட்டன.

(18) இவ்வாறு உயர்ந்த ஜன்மாதிகள் இழவுக்குக் காரணமாயின் தாழ்ந்த ஜந்மாதிகள் தாம் பேற்றுக்காரணமாமோ என்னும் சங்கையுண்டாக 'ஜந்மவ்ருத்தங்களென்று' தொடங்கி அந்தச் சங்கையைப் பரிகரிக்கிறார்.

(19) ப்ரயோஜகம் பகவத்ஸம்பந்தமும், அஸம்பந்தமும்.

தொடரும்.

இராகவராமாநுஜ தாஸர்,
மதுரை.

ஜன்ம வ்ருத்தங்களினுடைய உத்கர்ஷமும், அபகர்ஷமும் என்றது பிறப்பொழுக்கங்களின் உயர்வும் தாழ்வுமென்றவாறு. பேற்றுக்கும் இழவுக்கும் அப்ரயோஜகம் என்றது பகவத் விஷயத்தைப் பெறுகைக்கும், விடுகைக்கும் காரணமன்றென்றவாறு. அஃதாவது பிறப்பொழுக்கங்களின் உயர்வும் பேற்றுக்கும் இழவுக்கும் காரணமன்று. பிறப்பொழுக்கங்களின் தாழ்வும் பேற்றுக்கும் இழவுக்கும் காரணமன்றென்பதாம்.

இனி ஜன்மாதிகளின் உயர்வு வேதாத்யயன முகத்தாலே பேற்றுக்குக் காரணமென்றும், ஜன்மாதிகளின் இழிவு வேதாத்யயனத்திற்கு யோக்யமாகாமையால் இழவுக்குக் காரணமென்றும் சாஸ்திரங்களில் ப்ரஸித்தமாயிருக்க 'இழவுக்குறுப்பாகில் த்யாஜ்யமாமிறே'என்னலாமோஎன்பதுசங்கையின் தாத்பர்யமாகவைத்து இவ்வாக்யத்திற்கு மற்றோர்வகையாகப் பொருள் கூறப்படுகிறது. அஃதாவது பிறப்பொழுக்கங்களின் உயர்வும் பேற்றுக்குக் காரணமன்று; பிறப்பொழுக்கங்களின் இழிவும் இழவுக்குக் காரணமன்று; என்பதாம். ஏனெனின் பிறப்பொழுக்கங்களால் உயர்ந்தாரிற் சிலர் பகவத் விஷயத்தை இழப்பதாலும், பிறப்பொழுக்கங்களால் இழிந்தாரிற் சிலர் பகவத் விஷயத்தைப் பெறுகையாலும் எவ்விடத்தில் ஜன்மாதியின் உயர்வுண்டோ அவ்விடத்தில் பகவத் ப்ராப்தியுண்டு என்னும், எவ்விடத்தில் ஜன்மாதியின் உயர்வில்லையோ அவ்விடத்தில் பகவத் ப்ராப்தியில்லை என்னும் நியமமின்மையால்அவைகளின் உயர்வும் தாழ்வும் பேற்றுக்கும் இழவுக்கும் காரணமன்று என்றவாறு. இதனால் வியபசாரதோஷம் காட்டியபடி. இவ்வியபசாரதோஷத்தின் விவரம் பின்னர் விளக்கப்படும்.

(19) முன், ஜன்மாதிகளின் உயர்வும் தாழ்வும் பகவத் விஷயத்தைப் பெறுகைக்கும் விடுகைக்கும் காரணமன்றென்று அருளிச்செய்யப்பட்டது. ஆனால் அவற்றிற்குக் காரணந்தான் எது? என்னும் சங்கையுண்டாக அவற்றின் காரணத்தை யருளிச்செய்கின்றார். "ப்ரயோஜகம்" என்று தொடங்கி. ப்ரயோஜகம் என்றது பகவத் ப்ராப்தியாகிய பேற்றுக்குக் காரணம் என்றவாறு. பகவத ஸம்பந்தமும் என்றது 'நாம் பகவதநந்யார்ஹசேஷபூதர்' என்னும் ஞானமும் என்றவாறு. இவ்விடத்தில் மணவாளமாமுனிகள் பகவத் ஸம்பந்த பதத்திற்கு அதன் இயற்பொருளாகிய பகவத் ஸம்பந்தத்தை அர்த்தமாகக்கொள்ளாமல் ஆகுபெயர்ப்பொருளாகிய ஸம்பந்த விஷயஜ்ஞானத்தினை அர்த்தமாகஅங்கீகரித்திருக்கின்றார். அதற்குக்காரணம் யாதெனின்?

ஸ்ரீ:

ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்.

(106-ம் பக்கத்தொடர்ச்சி.)

௩-ம். திருவாய்மொழி—பத்துடையடியவர்.

ப்ரவேசம்.

(11)* அவதாரந்தன்னில்வந்தால் பாக்யஹீநர்க்கு ஸஜாதீய ப்ரதிபத்திபண்ணி அநர்த்தப்பட்டுப்போகவுமாய், பாக்யாதிகர்க்கு 'அரியனெளியனாகப்பெற்றோமே!' என்று ஆசிரயிக்கலாம்படி இரண்டுக்கும் பொதுவாயிறே இருப்பது; ஸர்வேசுவரன் அரியனென்றால் ஸம்ஸாரத்தில் ஆள்பற்றாதென்று அவனெளிமையை உபபாதித்துக்கொண்டு போந்தோம்; அதுதானே இவர்களுக்கு

தாத்பர்யாநுபபத்தியுள்ளவிடத்து சக்யார்த்தத்தை (இயற்பொருளை)விட்டு லக்ஷ்யார்த்தத்தை அங்கீகரித்தல் முறையாதலால் இம்முறைபற்றி இவ்விடத்தில் சக்யார்த்தமாகிய பகவத் ஸம்பந்தத்தைவிட்டு லக்ஷ்யார்த்தமாகிய பகவ ஸம்பந்த ஜ்ஞாநம் அங்கீகரிக்கப்பட்டது. தாத்பர்யாநுபபத்தியாவது— கூறியவரின் கருத்துப் பொருந்தாமை. இவ்விடத்தில் நூலாசிரியரின் கருத்துப் பொருந்தாமையாவது.— சித்து (அறிவுடைப்பொருள்) அசித்து (அறிவிலாப் பொருள்) என்னும் இரண்டு தத்வங்களும் ஈசுவரனுக்குச் சரீரமாதலின் எல்லாப்பொருள்களும் பகவத் ஸம்பந்தமுடையனவாம். மோக்ஷகாரணமான பகவத் ஸம்பந்தம் இவ்விடத்தில் நூலாசிரியருக்குத் தாத்பர்யம். அந்த மோக்ஷ காரணத்வம் முற்கூறிய சாதாரண பகவத் ஸம்பந்தத்தில் ஸம்பவியாமையால் ஸம்பந்த பதத்திற்கு ஸம்பந்தவிஷய ஜ்ஞாநம் அர்த்தமாகக் கொள்ளப்பட்டது. அஸம்பந்தமும் என்றது பகவத் விஷயத்தை இழப்பதற்குக் காரணமாம் பகவதநந்யார்ஹ சேஷத்வ ஜ்ஞாநத்தின் இன்மையுமாம்; என்றவாறு. அஃதாவது.— பேற்றுக்குக் காரணம் சேஷத்வ ஜ்ஞாநமும், இழவுக்குக் காரணம் சேஷத்வ ஜ்ஞாநமின்மையுமாம் என்பதாம்.

(11) ஆழ்வார் "வீடுமின்முற்றவும்" என்ற திருவாய்மொழியில் ஸர்வேசுவரன் அறப்பெரியோனாதலால் அவன் விஷயத்தில் பக்திசெய்து உய்யுங்களென்று உபதேசித்தார். அப்பொழுது சம்சாரிகள் இருகைமுடவனையானையேறு என்றால் அவனால் ஏறலாகுமோ? அதுபோல அற்பர்களாயிருக்கிற எங்களால் அறப்பெரியோனாகிய ஸர்வேசுவரனையடையலாகுமோ?

'இத்தனையெளியனோ' என்று விடுகைக்குடலாயிற்று; அவ்வெளிமை தானே ஆதரிக்கைக் குடலாயிற்ற துமக்கொருவருக்குமேயிறே' என்று எம்பாரைப்பார்த்து உடையவர் அருளிச்செய்தருளினராம். சில தார்மிகர் ஏரிகல்லினால் சேற்றிலே தல்லை யெழுத்திப் பட்டுப்போகாநிற்பர்கள்; சில விடாயர் அதிலே முழுகி விடாய் தீர்ந்துபோகாநிற்பர்கள்; விளக்கை ஏற்றினால் அதிலே விட்டிலென்று சில பதார்த்தங்கள் விழுந்து முடிந்துபோம். சிலர் அதினொளியாலே ஜீவிப்பர்கள். வேதாந்தநல்விளக்கிறே இவன்றான். ஆயர்குலத்தினிற்றோன்று மணிவிளக்கிறே. வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்கிறே.

என்ன, ஆழ்வார் இருகை முடவனுக்கும் ஏறுதற்குத் தகுதியாக யானை படிந்துகொடுக்குமேல் அவன் ஏறுதற்குத் தடையில்லையே. அதுபோல அறப்பெரியோனாகிய எம்பெருமான் ஸம்ஸாரி சேதனர்களும் பக்தி செய்வதற்குத் தகுதியாக அவதரித்து மிகவும் எளியனாயிருப்பானாகில் பக்தி செய்வதற்குத் தடையில்லையன்றோ! என்றருளிச்செய்கிறவிடத்தில் இவ்வாறாவுரைக்கப் பெற்றுளது. அவதாரதன்னிலவுந்தால் என்றது அவதாரத்தின் இயல்பை எடுத்துரைப்பதற்கு முற்பட்டால் என்றவாறு. ஸர்வேசுவரனுடைய அவதாரம் யாவரும் வந்தடைதற்கு எளிமையுடையதாயிருந்தாலும் நல்லவூழுடையவர்களே அவன் பரதேவதையென்று புத்திசெய்து உய்கினறார்கள். கெட்டவூழுடையார்கள் அவன் ஒரு மனிதனென்று கருதி அழிகிறார்கள். ஆக இவர்களின் நல்லவூழும், கெட்டவூழ்களுமே உய்வதற்கும் உய்யாமைக்கும் காரணங்களாகவிருக்கும். இவற்றை முறையே அக்ரூரர் மாலாகாரர் முதலானவர்களின் வரலாற்றாலும் சிசுபாலன் கம்சன் முதலானவர்களின் வரலாற்றாலும் நன்கறியலாம். ஸஜாதீயப்ரதிபத்தி—ஒத்தஜாதியில் பிறந்தவனென்று கருதுவது. இரண்டுக்கும் பொதுவாயிறே இருப்பது என்றது நற்பாக்கியமுடையவர்கள் வழிபட்டு வாழ்வதற்கும், அஃதில்லாதவர்கள் வாழாமைக்கும் பகவதவதாரம் பொதுவாயிருக்கு மென்றவாறு. ஸம்ஸாரத்தில் ஆள்பற்றாது என்றது கர்மபந்தமுடைய இவ்வுலகில் ஒருவரும் வந்து சேரமாட்டார்களென்றவாறு. உபபாதித்துகொண்டு போந்தோம்—எடுத்தோதிக்கொண்டு வந்தோம். எம்பார் பகவதவதாரத்தின் எளிமைக்குணத்தைக்கண்டு ஈடுபட்டிருந்தமைகண்ட உடையவர், உலகினர்க்குப் பகவதவதாரத்தின் எளிமை அவர்கள் கைவிட்டொழிவதற்குக் காரணமாகவிருந்தது; அந்த எளிமை உமக்கீடுபட்டுய்வதற்குக் காரணமாயிற்றே என்று விருப்புற்றருளிச்செய்தார். ஆக, இந்த ஐதிஹ்யத்தால் வழி

அ-ம். பாட்டு—நாளுநின்றடும்.

(12) 'ஸர்வேசுவரனை ஆசிரயித்தானாகில் அவன் பலப்ரதனாகிறான்; பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றவேண்டுகிறதென்' என்று நஞ்சீயர் பட்டரைக்கேட்க, "நாளுநந்திருவுடையடிகள் தம்நலங்கழல்வணங்கி" என்று, அவள் முன்னாக ஆசிரயிக்க வேண்டுமென்னுநின்றதுகண்டீரே என்று அருளிச்செய்து அவனை ஆசிரயிக்குமிடத்தில் இவன் குற்றம் பாராதே தன்னிழலிலே இவனை வைத்து அவன்பக்கல் முகம் பெற்றவாறே குற்றத்தைப் பொறுப்பிக்கும் அவள் முன்னாகப்பற்ற வேணும்.

பட்டு வாழ்வதற்கும், வழிபடாது மடிவதற்கும் பகவதவதாரத்தின் எளிமை ஹேதுவாயிருக்குமென்பது தெளிவாயிற்று. மேலும் 'எரிகல்லினால்' என்று தொடங்கிய வாக்கியமும், விளக்கேற்றினால் என்று தொடங்கிய வாக்கியமும் திருஷ்டாந்தங்களாம். இந்த இரண்டு திருஷ்டாந்தங்களுள் முதலாவது திருஷ்டாந்தத்திற்கேற்ப எம்பெருமானை "வாசத்தடம்" என்றும், "மரகத மணித்தடம்" என்றும் தடாகமாக வுருவகஞ்செய்துள்ளமையும் இவ்வியைத்துப்பொருள்கொள்ளத்தக்கது. இரண்டாவது திருஷ்டாந்தத்திற்கேற்ப எம்பெருமானை விளக்காக உருவகஞ்செய்தமைக்கு "வேதாந்தநல்விளக்கு" என்பது முதலிய மூன்று மேற்கோள் எடுத்துக்காட்டியமையும் கண்டுகொள்க.

(12) ஸர்வேசுவரனை ஆசிரயித்தானாகில் என்றது எம்பெருமானை உபாயமாக அடைந்தானாகில் என்றவாறு. அவன் பலப்ரதனாகிறான் என்றது அவன் பலத்தைக்கொடுத்தவனாகிறான் என்றவாறு. எல்லாப் பலத்தையுங் கொடுக்குந்தன்மை எம்பெருமானிடத்திலிருக்கின்றது; அங்ஙனமிருக்கப் பெரியபிராட்டியாரை உபகாரியாகப்பற்றவேண்டுவதற்குக் காரணமென்னை? என்பது நஞ்சீயரின் வினா. அதற்குப் பட்டர் "நாளுநந்திருவுடையடிகள் தம்நலங்கழல்வணங்கி" என்று ஆப்ததமரான ஆழ்வார் பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு பற்றவேண்டுமென்று அருளிச்செய்துள்ளதை நீர் அறியீரோ என்று அருளிச்செய்தார். இதனை, 'அவனை ஆசிரயிக்குமிடத்தில்' என்ற வாக்யத்தால் விளக்குகிறார். இவன் குற்றம் பாராதே தன்னிழலிலே இவனைவைத்து என்றது அடைந்தவனுடைய குற்றத்தைக்கருதாமல் தன்னுடைய கிருபைக்கு விஷயமாக்கி என்றவாறு. அவன்பக்கல் முகம் பெற்றவாறே என்றது எம்பெருமான் அபராதமுடைய சேதனனைக்கண்டு 'இவனை அங்கீகரிக்கமாட்டோம்' என்றுரைக்கின்ற காலத்தில் பிராட்டியார் அந்தோ! மண்தீசோற்றில் கல்லாராய்வாருண்டோ? இந்தக் கொடுவுலகில் அபராதஞ்செய்யாத சேதனர் யாருளர்? இவனுக்கு வேறுகதி யாதுளது?

ச-ம். திருவாய்மொழி—அஞ்சிறைய.

ப்ரவேசம்.

(13) முற்காலத்திலே அல்பம் விவக்ஷிதனாயிருப்பானொருவன் "வீதராகராயிருப்பார் பரிக்ரஹித்துப் போருகிறதொன்றாயிருந்தது; தத்வபரமாகவடுக்கும்" என்றித்திருவாய்மொழியளவும்வர

தேவரீர் அருளுடையீரன்றே; அந்த அருளிற்கு இவனை விஷயமாக்கவேண்டும் என்றுரைத்தபோது எம்பெருமானிடத்திலுள்ள இரக்கம் வெளிப்பட்டுச் சேதனனை அங்கீகரிக்கவேண்டும் என்ற கடாக்ஷம் நேர்ந்தபோது என்றவாறு. 'குற்றத்தைப் பொறுப்பிக்கும் அவள் முன்னாகப் பற்றவேண்டும்' என்றது எம்பெருமானிடத்திற் சொல்லி சேதனனுடைய குற்றத்தைப் பொறுக்கும்படிசெய்கிற பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டே பற்றவேண்டு மென்றவாறு.

(13) அல்பம்விவக்ஷிதன்—சிறிது கற்றுணர்ந்த வித்வான். வீதராகர்—விடப்பட்ட ஆசையுடையவர் (ஆசையற்றபெரியார்) பரிக்ரஹித்தல்—கைக்கொள்ளுதல். முற்காலத்தில் சிறிதுகற்றுணர்ந்த வித்வான் 'திருவாய்மொழி என்ற திவ்யப்ரபந்தத்தைப் பற்றற்ற பெரியார்கள் நாடோறும் அநுஸந்தித்துக்கொண்டாடுகிறார்களாதலால் இது உண்மைப்பொருளை நன்குதெரிவிப்பதொன்'றென்று கருதிப்பயின்று வந்தான். இந்த 'அஞ்சிறைய மடநாராய்' என்ற திருவாய்மொழி, பிரிவாற்றாத தலைவி இரங்கி நாரை முதலிய பக்ஷிகளைத் தூதுவிடுவதைத் தெரிவிக்குமதைக்கண்டு 'காமநூல்' என்று மதித்துக் கைவிட்டான். இவ்வாறு இவன் கைவிட்டதற்கு வியாக்யாதா காரணங் காட்டுகிறார்:—'நிதித்யாஸிதவ்ய:' என்று. மனைவிமக்கள் முதலானவர்களிடத்தில் விருப்பமுடையவராகிய சம்சாரிகளும் கைப்பற்றி உய்வதற்காக பக்தியினால் தோன்றிய சொல்லைக் காமுகவாக்யமாகச் சொல்லப்பட்டது. இது நிற்க; வேதாந்தத்தில் 'ஸர்வேசுவரனைக் கண்கூடாகக் காண்பதுபோல தியானஞ்செய்யக்கடவது' என்று விதிக்கப்பட்டது. இங்ஙனம் தியானம் செய்வதும் ப்ரீதிரூபமாயிருத்தல்வேண்டும். இக்தப் ப்ரீதிரூபமான தியானத்தைத் தான் பகவத்காமமென்று சொல்வது. அத்தகைய காமம் ஆழ்வார்போன்ற முற்றத்துறந்த பெரியாரிடத்தில் மாத்திரமே காணலாம். "காமமஷ்டகுணம் பவேத்" என்றபடி பெண்களுக்குப் புருஷவிஷயமான காதல் எண்மடங்கு அதிகமாயிருக்குமாதலால் ஆழ்வார் தமக்கு ஈசுவரவிஷயமான பக்தி விஞ்சியிருப்பதைக் காதலி கூற்றால் அருளிச்செய்தார். இந்த உண்மையறிதற்கு நற்பாக்யமில்லாததினால் இதைப்பயின்று வந்த இவன் 'இது காமுகவாக்யமாகவிருக்கது' என்று கைவிட்டான்.

அதிகரித்து, இத்திருவாய்மொழியளவிலேவந்தவாறே 'இது காமுக வாக்யமாயிருந்ததீ' என்று கைவிட்டுப் போனனும். "நிதிவ்யா ஸிதவ்யஃ" "நிதித்யாஸிதவ்ய:" என்று விதிக்கிற பகவத் காம மென்றறிந்திலன் பாக்யஹாநியாலே.

உ-ம். பாட்டு—என்செய்ய.

(14) திருக்கோட்டியூரிலே தெற்காழ்வான் கோளரியாழ்வானுக்குத் தீர்த்தத்துறையிலே சொன்னவார்த்தை:— ஒரு முழுக்காலும் இரண்டு முழுக்காலும் போகாதுகாண்; தெற்காழ்வார் கையில் திருவாழியாலே வினையை யறுத்துக்கொண்டு போகிலத்தனையொழிய ஒன்றிரண்டு முழுக்கால் போகாதுகாண் நான் பண்ணின பாபம்.

ச-ம். பாட்டு—என்னீர்மை.

(15) பட்டரை ஒரு தமிழன் "கேட்டிரங்கி" என்னாதே "கண்டிரங்கி" என்னப்பெறுமோ என்ன, "அணைத்தகை நெகிழ்த்தவளவிலே வெளுத்தபடி கண்டால் பிரியத்தகாதென்றிருக்க

---

(14) "முன்செய்தமுழுவினையால்" என்றவிடத்தில் 'அடியேன்செய்த மஹத்தான பாபத்தைத் தேவரீர் அகற்றிலன்றி அடியேனால் இஃதகற்றற் பாலதோ?' என்று ஆழ்வார் அருளிச்செய்கிறவிடத்தில் இநத விருத்தாந்தம் உரைக்கப்பட்டது. தெற்காழ்வான், கோளரியாழ்வான் என்பார் ஸ்ரீவைஷ்ணவர்கள். ஒருநாள் கோளரியாழ்வான் தெற்காழ்வானை நோக்கி, 'இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் பாபம் ஒழிவதற்காகப் புண்ணிய தீர்த்த ஸ்நாநம் செய்யவேண்டாமா?' என்று வினவினர். அதற்கவர் 'பெருமாள் தம் சக்கரப் படையால் நம் வினையை அகற்றினாலன்றி இந்தத் தீர்த்தத்தில் முழுகிற முழுக்கினால் பாபமகலமாட்டா;' என்று விடையளித்தார். [தெற்காழ்வார்—பெருமாள்.]

இதனால் ஸர்வேசுவரனுடைய நிக்ரஹ வடிவினவாகிய பாபம் அவனுடைய அருளினாலகலுமேயன்றிப் பிராயச்சித்தங்களால்அகலுதலரிதென்பது பெறப்படும்.

(15) "என்னீர்மைகண்டிரங்கி" என்றவிடத்தில் இது குறிப்பிடப் பெற்றுளது. இங்குத் தமிழனுடைய வினாவின் அர்த்தம் யாதெனின்;— நாயகனைப்பிரிந்து தூதுவிடுகிற பிரகரணத்தில் தலைவியினிலைமையைத் தேசாந்தரத்திலிருப்பவனாகிய தலைவன் காணுமாறில்லையாகையால் என்

வேண்டாவோ; 'இப்படிக்கூடுமோ' என்னில் 'புல்லி' இத்யாதி 'காதலர்தொடுவுழி' இத்யாதி;உனக்கித்தமிழ்போகாதோ''என்றார்.

னீர்மை கேட்டிராங்கி என்று சொல்லுவதே பொருத்தமுள்ளது என்பதாம். அதற்குப் பட்டர் அருளிய சமாதானம் யாதெனின்;— முன்பு இருவரும் கூடியிருக்கிற காலத்தில் சிறிது பிரிந்த அளவில் தலைவிக்குண்டாகிய வைவர்ண்யத்தை (பசப்பு நிறத்தை)த் தலைவன் கண்டிருக்கிறான் ஆகையால், என் னீர்மை என்னத்தட்டில்லை என்பதாம். இதற்குச்சமாதானமாக இரண்டு தமிழ்மேற்கோள்களும் காட்டப்பட்டன. உனக்கு இத்தமிழ்போகாதோ? என்றது, உனக்கு இத்தமிழ்மேற்கோள்களில் அறிவு செல்லாதோ என்றவாறு. அஃதாவது இவைகளை நீ அறியாயோ? என்பதாம்.

கேள்விக்குச் சமாதானம் அருளிய இரண்டு மேற்கோள்களுள் "புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில், அள்ளிக்கொள்வற்றே பசப்பு" என்பது ஒன்றும். இது. திருக்குறளில் 'பசப்புறுபருவரல்' என்றஅதிகாரத்திலுள்ளது. தலைவனைப்பிரிந்த தலைவி தன்னிடத்திலுண்டான நிறவேறுபாட்டைக்கண்டு வருந்தியபொழுது தோழி, 'நாயகன் பிரிந்தானேலும் சமீபத்திலேயிருக்கிறானாதலால் விரைவில்வந்து கவலையை அகற்றுவானென்பதறியாது வருந்துகின்றனையே' என்று கூற, அதற்கு மறுமொழியாகத் தலைவி கூறுவதே இக்குறளிற் குறிப்பிடும் விஷயமாம். இதன் பொருளாவது.— முன்பு ஒருகாலத்தில் தலைவனும் யானுமாக இன்புற்றிருந்தபோது என்னறியாமையால் சிறிது அணைத்தகையை நெகிழ்த்திருந்தேன். அக்காலத்தில் பசப்பு அள்ளிக்கொள்வதுபோல வந்து செறிந்தது; என்பதாம். சிறிது அணைத்தகையை நெகிழ்த்தவளவிலே இத்துணைப்பாடுபடவேணுகில் பிரிவின்கண் படாதபாடுபடவேனென்பது தலைவியின் கருத்தாம்.

இரண்டாவது மேற்கோள்.— "ஊருண்கேணி உண்டுறைத்தொக்க, பாசியற்றேபசலைக்காதலர், தொடுவுழித்தொடுவுழிநீங்கி, விடுவுழிவிடுவுழிப் பரத்தலானே" என்பதாம். இது, தொகை நூல்களுள் ஒன்றாகிய குறுந்தொகையிலுள்ளது. சங்கப்புலவருள் ஒருவராகிய பரணர் பாடியது. தலைமகளோடு கந்தர்வ வழக்கத்தான் கலந்த தலைமகன் சில காரணங்களை முன்னிட்டு அவளை உலோக மரியாதையில் மணம்புரிந்துகொள்ளவேண்டுமென்று காலந்தாழ்த்தபோது, தலைவியின் வடிவெங்கும் நிறமாறுபட்டமை கண்டு, 'நாயகனோடு கூட்டுறவு நடையாடாநிற்கச்செய்தேயும் உனக்கு இப்பசலை பூப்பானேன்' என்று தோழி கேட்க, அதற்கு விடையளிக்கிறாள் இப் பாட்டால்.

இதன் பொருளாவது.— நாயகன் தொட்டதொட்டவிடங்களில் விலகி விட்டவிட்டவிடங்களிற் பரந்திருத்தலால் வைவர்ண்யமானது ஊருணியில்

ரு-ம். பாட்டு—நல்கித்தான்.

(16) திரியக்கை 'அருளாய்' என்கிறதேதென்ன 'நம்பியேறு திருவுடையதாஸர் திருநாட்டிற்கு நடந்தார்' என்று பட்டருக்கு விண்ணப்பஞ்செய்ய அதுக்கென்றெழுந்திருந்து 'அவர் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் பரிமாறும்படிக்கு திருநாட்டுக்கெழுந்தருளினாரென்னவேணுங்காண்' என்றருளிச்செய்தார்.

அ-ம். பாட்டு—நீயலையே.

(17) பெரியதிருமலைநம்பி தம்முடைய அந்திமதசையிலே தமக்கொரு வெண்ணெய்க் காடும்பிள்ளையாயிற்றுத் திருவாராதனம். அவர் திருமுன்பில் திருத்திரையை வாங்கச்சொல்லி, "சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நானினியுனது, வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே" என்றாராம்.

நீருண்ணுந் துறையிற்கூடியபாசியைப் போன்றது; என்பதாம். இவ்விரண்டு பிரமாணங்களால் தலைவி தலைமகனோடு இன்பம் நுகர்கின்ற காலத்திலும் பசப்புறுதலுண்டென்பது பெறப்பட்டமையால் ஆழ்வார் "என்னீர்மைகண்டிரங்கி" என்றருளியதே சாலப்பொருத்தமுடையதென்பது நன்கறியப்படும்.

(16) ஆழ்வார் பகவத் விச்லேஷத்தால் ஆற்றாமைமீதூரப்பெற்றுத் தம்மைத் தலைவியாகப்பாவித்துக் குருகை நோக்கித் தன்னாயகனிடத்தில் தூதுவிடுகிறவிடத்தில் இவ்வார்த்தை அருளிச்செய்யப்பெற்றுளது. ஆழ்வார் ஒரு பக்ஷியை நோக்கி 'அருளாய்' என்றதனால் பகவத் விஷயத்தில் உபகரிப்பார் எவராயினும் அவர் கௌரவிக்கத்தக்கவரென்பது போந்தபொருளாம். நம்பியேறுதிருவுடைய தாஸர் திருநாட்டிற்கு நடந்தார் என்று சொல்லக்கேட்டபோது பட்டர் அதுக்குற்றார் என்றதனால் பகவத் விஷயத்தில் உபகரிப்பாரைக் கௌரவக் குறைவாகக் கூறுவதைக் கேட்பது அசக்யமாம் என்பது பெறப்படும்.

(17) ஆழ்வார் ஒரு பூவையைநோக்கி "உனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே" என்று அருளிச்செய்கிறவிடத்தில் இஃது உரைக்கப்பெற்றுளது. வெண்ணெய்க்காடும்பிள்ளை—கண்ணன். நான் சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்—நான் சமுதாயசோபையோடு அவயவசோபையையும் இழந்தேன். [சமுதாய சோபை—அவயவ முழுமையுமுள்ள அழகு. அவயவசோபை—ஒவ்வோரவயவங்களிலுமுள்ள அழகு.] இனி உனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே—இனிமேல் உனது வாயில் மதுர

௫-ம். திருவாய்மொழி—வள்ளேழுலகு.

௫-ம் பாட்டு—மானேய்நோக்கி.

(18) "தீம்புசேருவது க்ருஷ்ணனுக்கே யாகையாலே 'போம் பழியெல்லாம் அமணன்றலையோடே' என்னுமாபோலே அவன்றலையிலே ஏறிட்டுச் சொல்லுதல். இதற்கு அரும்பதத்திற்கண்ட வரலாறு வருமாறு:—ஒரு கள்ளன் ஒரு ப்ராஹ்மணன் க்ருஹத்திலே கன்னமிட, அது ஈரச்சுவராகையாலே யிருத்திக்கொண்டு அவன் மரிக்க; அவ்வளவிலே அவன் பந்துக்கள் வந்து ப்ராஹ்மணனைப் பழிதரவேணும்' என்ன இரண்டு திறத்தார்களும் ராஜாவின்பாடே போக, அந்த ராஜாவும் அவிவேகியாய் மூர்க்கனுமாகையாலே 'பிராம்மணா! நீ ஈரச்சுவரை வைக்கையாலே அவன்மரித்தான்; ஆகையாலே நீ பழிகொடுக்கவேணு' மென்ன அவன் 'எனக்குத் தெரியாது; சுவர்வைத்த கூலியாளைக் கேட்கவேண்டும்' என்ன அவனையழைத்து 'நீயன்றோ ஈரச்சுவரை வைத்தாய்' பழிகொடுக்கவேணும் என்ன, அவனும் 'தண்ணீர் விடுகிறவன் போரவிட்டான்;' என்றற்

மான உணவை ஊட்டுவாரை ஆராய்வாய். பெரியதிருமலைநம்பி தமது அந்திமதசையில் திருவாராதன எம்பெருமானை நோக்கி, "சாயலொடுமணிமாமைதளர்ந்தேன் நான் இனியுனது, வாயலகிலின்னடிசில் வைப்பாரை நாடாயே" என்று அருளியதனால் அர்ச்சாவதார எம்பெருமானிடத்தில் அத்துணை ஈடுபாடுடையவராயிருந்தாரென்பது வெளியாயிற்று. மேலும் க்ருஹார்ச்சனை எம்பெருமானிடத்தில் எல்லோருக்கும் மிக்க பரிவுண்டாக வேண்டுமென்பதும் இதனால் அறிந்துகொள்ளத்தக்க முக்ய விஷயமாம்.

(18) "கூனேசிதையவுண்டைவில் நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா" என்பதற்குக் கூனியின் கூனை நிமிர்த்த இராமபிரானே! என்று சக்ரவர்த்தித் திருமகன் விஷயமாகப் பொருள் அருளிச்செய்துவிட்டு, கண்ணன் விஷயமாகவும் பொருளுரைக்கவந்தவிடத்து இது குறிப்பிடப்பெற்றுளது. 'போம்பழியெல்லாம் அமணன் தலையோடே' என்பது பழமொழிபோல வழங்கப்பெறுகிற ஓர் பழைய வரலாறும். இந்த வரலாற்றால் யாதொரு பழியுஞ் செய்யாத அமணனுக்குப் பெரிய ஆபத்து நேர்ந்ததுபோல கண்ணபிரான் வாழ்ந்துவந்த கோகுலத்திலும், த்வாரகையிலும் எவையேனும் தீம்புகள் நேர்ந்தால் அத்தீம்புகளைக் கண்ணன் செய்யாதிருந்தாலும், கண்ணனே செய்தானென்று சொல்லுவர்கள். இதனை ஸ்யமந்தகமணி விருத்தாந்தத்தாலறியலாம்.

செய்யலாவதென்?' என்ன அவனையழைத்துக் கேட்க, அவனும் 'குயவன் பெரும்பானையைத் தந்தான்; அதனாலே நீரேறிற்று' என்ன, அவனையழைத்துக்கேட்க, அவனும், 'என்னால் வந்ததன்று; ஒரு வேசை போகவரத் திரிந்தாள்; அவளைப்பார்க்கிற பராக்கிலே பானை பருத்தது' என்ன, அவளையழைத்துக் கேட்க, அவளும், 'என்னாலன்று; வண்ணான் புடவைதாராமையாலே போகவரத் திரிந்தேன்' என்ன, அவனையழைத்துக்கேட்க, அவனும், 'என்னால் வந்ததன்று; துறையிற் கல்லிலே ஓரமணன் வந்திருந்தான்; அவன் போகவிட்டுத் தப்பவேண்டிற்று' என்ன, அந்த அமணனைத்தேடிப் பிடித்துக்கொண்டு வந்து, 'நீயன்றோ இத்தனையும் செய்தாய் பழி கொடுக்கவேணும்' என்ன, அவன் மௌனியாகையாலே பேசாதிருக்க, 'உண்மைக்குத்தரமில்லை' என்றிருக்கிறான்; 'இவனே எல்லாஞ்செய்தான்.' என்று ராஜா அவன் தலையை அரிந்தான்'' என்பதாம்.

கூ-ம். திருவாய்மொழி—பரிவதில்.

(19) நம்பிதிருவழுதிநாடுதாஸர், ''இத்தேவஜாதி வெறும் மரையோ, 'உப்புச்சாறு கிளருவதெப்போதோ' என்று கவிழ்ந்து பார்த்துக் கிடப்பதே! இவனழகையும் போக்யதையும் விட்டு'' என்பராம்.

எ-ம். திருவாய்மொழி—பிறவித்துயர்.

௪-ம். பாட்டு—மயர்வற.

(20) ''என்சொல்லியான்விடுவனே'' என்பதற்கு அரும்பதத்திற்கண்ட வரலாறு வருமாறு.— ''ஒரு ப்ராஹ்மணப்பிள்ளை மாம

---

(19) அமிருதமதனத்தைக் குறிப்பிடுகின்ற ''அமுதமமரர்கட்களித்த'' என்றவிடத்தில் இது குறிப்பிடப்பெற்றுளது. தேவர்கள், ஆராவமுதாகிய எம்பெருமானையடைந்து இன்புறுவதே பரமப்பிரயோஜனமென்றுணராமல் கடலில் எப்பொழுது அமிர்தம் தோன்றப்போகிறதோவென்று கவிழ்தலையிட்டுக்கொண்டிருந்த தேவர்களினிலைமையை நோக்கி உதாசீனமாக 'இத்தேவஜாதி வெறுமரையோ' என்றார். வெறுமரை—கேவலமான். ஞானக்குன்றலையும் கவிழ்தலையிட்டிருப்பதையுங்குறித்து மரை யென்றார்.

(20) ஆழ்வார், தமக்கு எம்பெருமான் செய்த உபகாரத்தை அநுஸந்தித்து, இங்ஙனம் பேருபகாரஞ்செய்துகொண்டிருப்பவனை ஏதேனும் ஒரு

ளர் க்ருஹத்திற்குப்போக அவன் தரித்திரனுகையாலே இவனையுங் கூட்டிக்கொண்டுபோய், நெடும்போதேற்றமிறைத்துக் காலோய்ந்த வளவில், 'விட்டுப்போகைக்கு ஹேதுவாக மாமனருக்கொரு கோபத்தையுண்டாக்குவோம்' என்று இறைக்கிற மாமனர் மேலே உமிழ; அவனும் 'ஒரு குளிர்த்தியிருந்தபடியென்' என்ன; 'சுடச் சுடவுமிழ்வாரைத்தேடிக்கொள்' என்று இறங்கிப் போனனும். அப் படியேதேனுமாகிலும் குற்றத்தையிட்டுப போகைக்கு இவனிடத் திலே ஒரு குறையுண்டானல்ன்றோவிடலாவதென்றுகருத்து.'' எ-ம்.

எ-ம். பாட்டு—யானெட்டி.

(21) "*தானெட்டி வந்து*" என்பதற்கு அரும்பதத்திற்கண்டது வருமாறு:— "ஒரு ப்ராம்மண்ன், பரமலுப்தனுயிருப்பானுய், வேறொரு ப்ராம்மணன் அவன் க்ருஹத்திலே போஜனர்த்தமாகச் செல்ல, சிலரிருந்து 'அவனொருவனுக்கும் அசனமிடான்; லுப்தன் காண்' என்ன, 'உங்கள் முன்பே அவனகத்திலே எப்படியுமுண்டு வருகிறேன்' என்று ஆர்த்தியைக்காட்டி 'இத்தனை ப்ரசாதமுண்டாகிலும் ஜீவிக்கலாய்; என்ன, அவன் 'தன்னுலாவதில்லை' என்ன, இவனுமிறுகப்பிடிக்க' 'ஆனல் இலை இல்லை' என்ன, மடியில் இலை எடுத்துக்காட்டி, 'கொண்டுவந்தேன்' என்ன, 'கழுத்தறுக்க வருகிறவர் கத்தியும் கையிலே கொண்டுவாரார்ரோ' என்று சாறசனமிட்டானும்'' என்பதாம்.

தொடரும். ப. அ.

போலிக்காரணமான குற்றத்தைக்கற்பித்தேனும் அவனைப்பற்ருது விடுமாறில்லை; என்றவிடத்தில் இவ்வாலாறுரைக்கப்பெற்றுளது.

(21) சக்ரவர்த்தித்திருமகன் "𑌅𑌦𑍍𑌯𑍈𑌵 𑌮𑌰𑌣𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌤𑌰𑌣𑌂 𑌸𑌾𑌗𑌰𑌸𑍍𑌯 𑌵𑌾" "அத்யைவமரணம்வாபி தரணம் ஸாகரஸ்யவா" என்று இச்சமுத்திரத்தை முடித்தல், கடத்தல் என்ற இவ்விரண்டு செயலல்லது வேறுசெய்வதில்லை' என்று ஆணையிட்டு நின்றதுபோல, ஆழ்வார, 'யான் எம்பெருமானை விட்டகன்று நிற்கவேண்டுமென்று கருதினுலும் அவன் என்னை எவ்வகையாலும் விட்டகலேன்' என்று பற்றிக்கொண்டிருக்கிருன் 'என்றவிடத்தில் இஃதுரைக்கப்பெற்றுளது. லுப்தன்—உலோபி. ஆர்த்தியைக்காட்டி—வறுமையைவெளிப்படுத்தி. அசனம்—அஞ்சியுணவு.